# தமிழ் இசைப் பாட்டுக்கள்

(சாகித்தியங்கள் மட்டும்)



T17109
R005J03
T. 17109

புதுமைப் பதிப்பகம்

காரைக்குடி

# தமிழ் இசைப் பாட்டுக்கள்

(சாகித்யங்கள் மட்டும்)

தொகுத்தவர்:

அ. லெ. நடராஜன்

டி. கே. சி. அவர்கள் எழுதிய முன்னுரை குறிப்புகளுடன்

புதுமைப் பதிப்பகம்

காரைக்குடி

தமிழ் இசைக்குப் புத்துயிர் அளித்த

வள்ளல்

ராஜா சர்

அண்ணாமலை செட்டியார் அவர்களுக்கு

அன்புரிமை யாகிறது இந்நூல்.

—புதுமைப் பதிப்பகத்தார்.

பதிப்புரிமை பெற்றது

விலை ரூபா 1—8—0

காரைக்குடி குமரன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

# பதிப்புரை

'தமிழ் இசைப் பாட்டுக்கள்' என்ற பெயருடன் பதம், கீர்த்தனே, அபிநயப் பாட்டு முதலியவை அடங்கிய புத்தகம் ஒன்று ஸ்வரத்துடன் வெளியிட்டு இருக்கிறோம். அதைப் பார்த்ததும், சில அன்பர்கள் "இதில் காணப்படும் சாகித்தியங்கள் மிகவும் அருமையான பழைய சாகித்தியங்கள் ஆகும்; சங்கீத வித்வான்களிடை மட்டும் இவற்றைப் பரப்பினல் போதாது; தமிழில் பழைமையான நல்ல சாகித்தியங்கள் இல்லே இல்லே என்று சொல்லுகிற இக்காலத்தில் ரஸிகர்களுக்கும் அபிமானிகளுக்கும் தெரியும்படி இவற்றைப் பரப்ப வேண்டும், அதனுல் நல்ல பலன் ஏற்படும்" என்று சொன்னர்கள். அதற்காகவேண்டி, சாகித்தியங்களே மட்டும் தனியே ஒரு புத்தகமாக வெளியிடுங்கள் என்றும் தெரிவித்தார்கள்.

எனவே, சாகித்தியங்களே மட்டும் தனியே ஒரு புத்தகமாக வெளியிடுகிறோம்.

இதில் காணப்படும் சாகித்தியங்களே இயற்றிய சாகித்திய கர்த்தாக்களுக்கும் அவர்களுடைய சந்ததியார்களுக்கும் நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

பல பாடல்களில் இருந்த பிழைகளேத் திருத்தியும், பாட்டுகளுக்கு முன் உள்ள முன்னுரையும் அடியில் காணப்படும் குறிப்புகளும் எழுதித் தந்த, திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி உரியது.

— புதுமைப் பதிப்பகத்தார்.

# பொருளடக்கம்


| பாட்டு எண். | பாடலும் இயற்றியவர் பெயரும். | ராகம். | பக்க எண். |
|---|---|---|---|
| 1 | வருவார் வருவார் என்றென்<br>முத்துத்தாண்டவர் | கல்யாணி | 3 |
| 2 | தையலே உனை நினைந்து<br>சுப்பராமய்யர் | ,, | 4 |
| 3 | ஏங்காணும் வரவர<br>கவிகுஞ்சர பாரதி | ,, | 5 |
| 4 | எல்லாம் அறிவேன்<br>கவிகுஞ்சர பாரதி | ,, | 6 |
| 5 | எத்தைக் கண்டு நீ<br>சுப்பராமய்யர் | ,, | 7 |
| 6 | எத்தனை சொன்னாலும் * | சாவேரி | 8 |
| 7 | பதறி வருகுது * | காம்போதி | 9 |
| 8 | இவன் ஆரோ<br>அழகர் குறவஞ்சி | ,, | 10 |
| 9 | மனதறியாமல்<br>முத்துத்தாண்டவர் | ,, | 11 |
| 10 | நடமாடித் திரிந்த<br>பாபவினாச முதலியார் | ,, | 12 |
| 11 | திருவொற்றியூர்<br>கனம் கிருஷ்ணய்யர் | அடாணா | 13 |
| 12 | எந்நேரமும்<br>மாரிமுத்தா பிள்ளை | தோடி | 14 |
| 13 | தாயே யசோதா * | ,, | 15 |


* இந்த அடையாளமிட்ட பாடல்களுக் கெல்லாம் சாகித்திய கர்த்தாக்களின் பெயர் தெரியவில்லை.

| | | | |
|---|---|---|---|
| 14 | யார் போய்ச் சொல்லுவார் * | தோடி | 16 |
| 15 | வருவார் அழைத்துவாடி<br>இராமலிங்க சுவாமிகள் | பியாகடை | 17 |
| 16 | இனிமேலவருக்கும்<br>கவிகுஞ்சர பாரதி | பைரவி | 18 |
| 17 | வேலவரே உமைத்தேடி * | ,, | 19 |
| 18 | முகத்தைக் காட்டியே<br>பாபவிநாச முதலியார் | ,, | 20 |
| 19 | பேயாண்டி தனைக் கண்டு<br>கோபாலகிருஷ்ண பாரதி | சாரங்கா | 21 |
| 20 | இனி என்ன பேச்சு<br>சுப்பராமய்யர் | சகானு | 22 |
| 21 | என்னிட நடத்தைக்கும்<br>சுப்பராமய்யர் | சங்கராபரணம் | 23 |
| 22 | வருவாரானல்<br>சுப்பராமய்யர் | முகாரி | 24 |
| 23 | காலைத் தூக்கி<br>மாரிமுத்தா பிள்ளை | எதுகுலகாம்போதி | 25 |
| 24 | இன்னமும் ஒருதரம்<br>கோபாலகிருஷ்ண பாரதி | ,, | 26 |
| 25 | ஏதுக்கித்தனை மோடி<br>மாரிமுத்தா பிள்ளை | சுருட்டி | 27 |
| 26 | தானே வருகிருரோ<br>சுப்பராமய்யர் | கேதாரகௌளை | 28 |
| 27 | உன் அத்ருஷ்டம் ஸ்வாமி<br>கவிகுஞ்சர பாரதி | தன்யாசி | 29 |
| 28 | நடனமாடினுர்<br>கோபாலகிருஷ்ண பாரதி | வஸந்தா | 30 |
| 29 | அதுவும் சொல்லுவாள்<br>சுப்பராமய்யர் | சௌராஷ்ட்ரம் | 31 |

| | | | |
|---|---|---|---|
| 30 | தெருவில் வாரானே<br>முத்துத்தாண்டவர் | கமாஸ் | 33 |
| 31 | சேவிக்க வேண்டுமையா<br>முத்துத்தாண்டவர் | ஷண்முகப்பிரியா | 37 |
| 32 | ஆடிக்கொண்டாரந்த<br>முத்துத்தாண்டவர் | மோகனம் | 38 |
| 33 | அருமருந்தொரு<br>முத்துத்தாண்டவர் | ,, | 39 |
| 34 | ஏன் பள்ளிகொண்டீர்<br>அருணாசலக் கவிராயர் | ,, | 40 |
| 35 | சுந்தர குஞ்சித<br>முத்துத்தாண்டவர் | கரகரப்பிரியா | 41 |
| 36 | வருவாய் வரந் தருவாய்<br>துரைசாமிக் கவிராயர் | கேதாரம் | 42 |
| 37 | மாயவித்தை செய்கிறானே<br>முத்துத்தாண்டவர் | ,, | 43 |
| 38 | என்னை ஆளையா<br>வேதநாயகம் பிள்ளை | தர்பார் | 44 |
| 39 | காணாமல் இருந்தால்<br>முத்துத்தாண்டவர் | காம்போதி | 45 |
| 40 | சபாபதிக்கு வேறே<br>கோபாலகிருஷ்ண பாரதி | ஆபோகி | 46 |
| 41 | அம்பர சிதம்பர<br>முத்துத்தாண்டவர் | சுருட்டி | 47 |
| 42 | இன்னும் பராமுகம் ஏனோ<br>துரைசாமிக் கவிராயர் | பியாகடை | 48 |
| 43 | சிதம்பரம் அரஹரா<br>கோபாலகிருஷ்ண பாரதி | ,, | 49 |
| 44 | சாமி ஏழை<br>துரைசாமிக் கவிராயர் | கானடா | 50 |

| | | | |
|---|---|---|---|
| 45 | பலமந்திரத்திற்கும்<br>மாரிமுத்தா பிள்ளை | மத்தியமாவதி | 51 |
| 46 | ஆடின தெப்படியோ<br>முத்துத்தாண்டவர் | மாயாமாளவகௌளை | 52 |
| 47 | சிவசிதம்பரம் என்று<br>மாரிமுத்தா பிள்ளை | பைரவி | 53 |
| 48 | நினைப்பதெப்போது<br>வேதநாயகம் பிள்ளை | நாதநாமக்ரியை | 54 |
| 49 | காமனால் வீணிலே<br>முத்துத்தாண்டவர் | காம்போதி | 55 |
| 50 | அருட் ஜோதி<br>இராமலிங்க சுவாமிகள் | பந்துவராளி | 56 |
| 51 | என்னதான் சொன்னாரடி<br>மதுரகவி | சாவேரி | 59 |
| 52 | காசிருந்தால் இங்கே<br>கவிகுஞ்சர பாரதி | மத்தியமாவதி | 60 |
| 53 | நேற்று ராத்திரிப்போன<br>சுப்பராமய்யர் | காம்போதி | 61 |
| 54 | உன்னைத்தூது<br>மதுரகவி | சாவேரி | 62 |
| 55 | இதைவிட இன்னும் வேறே<br>சுப்பராமய்யர் | ,, | 63 |
| 56 | தத்தை மொழியாள் * | கல்யாணி | 64 |
| 57 | இன்னும் என்மேல்<br>கவிகுஞ்சர பாரதி | முகாரி | 65 |
| 58 | எல்லா அருமைகளும் * | தோடி | 66 |
| 59 | நித்திரையில் * | பந்துவராளி | 67 |
| 60 | யாருக்காகிலும் பயமா<br>மதுரகவி | பியாகடை | 68 |

# பதம்



## வருவார் வருவார் என்றேன் : கல்யாணி

காதலனுகிய நடராஜ மூர்த்தியை எதிர்பார்த்த வண்ண மாய்ப் படுக்கையில் படுத்திருக்கிருள் நாயகி. 'வந்து விட்டாரா வந்து விட்டாரா' என்று சகிமாரைச் சதா கேட்டுக் கொண்டிருக்கிருள். அப்பாவிகள், சகிமார் என்ன செய்வார்கள். 'வருவார் வருவார்' என்று தேறுதல் வார்த்தை சொல்லுகிருர்கள். 'வந்தார்' என்று ஒரு பாவியும் சொல்லவில்லையே என்று வருந்துகிருள் நாயகி.

அந்தத் தோழிகள் வெறுமனேயா 'வருவார் வருவார்' என்கிருர்கள்! இல்லை. இப்படி இப்படி ஆடிக்கொண்டு வருவார் என்கிருர்கள். சாமியின் காரியம் நமக்குத் தெரியாதோ, தாமதம் செய்வாரோ என்றெல்லாம் ஒரே அடுக்காய் அடுக்குகிருர்கள்.

ராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

வருவார் வருவா ரென்றென் மனதைத் தேற்றுவ தல்லால்
வந்தா ரென்பாரைக் காண்கிலேன்

அனுபல்லவி

தெருவிற்கும் வாசற்கும் திரிவார் சகிமாரெல்லாம்
தில்லாபுரீசர் முன்போய் நல்லார்என் காதல் சொல்லார் -வரு

சரணம்

கங்கை சடையிலாடச் செங்கையில்த் துடியாட
பங்கய மெனும் கைகொள் மங்கையர்கள் கொண்டாட
நங்கை சிவகாமி கொங்கைசேர் புயமாட
செங்கை வீசிஆடச் சதங்கை பாதத்திலாட -வரு

2.

நாமறியோமோ சாமி தாமதம் செய்வாரோ
நீ மயங்காதேயென்ன சேமேலேறி வருவார்
காமனுர் வந்தாலென்ன சோமனுர் வந்தாலென்ன
பூமலர் வாடுமுன்னே ஏமசபேச ரென்முன் -வரு

---

தில்லாபுரி - தில்லையில் எழுந்தருளிய. சேமேல் ஏறிவருவார் - ரிஷபத்தின் மேல் ஏறிவருவார். ஏம சபேசர் - பொன்னம்பலவாணர்

## 2. தையலே உனை நினைந்து: கல்யாணி

வேலூர் ஸ்தலத்திலுள்ள முருகனிடத்தில் காதல் கொண்ட நாயகி ஒரே பிடிவாதமாய் ஊடல் செய்கிருள். முருகனுடைய தூதாளாக வந்த தோழி முருகனுக்காகப் பரிந்து பேசுகிருள்.

ராகம்: கல்யாணி தாளம்: ரூபகம்

பல்லவி

தையலே உனைநினைந்து உருகி
தயங்குருனடி மானே

அனுபல்லவி

வையம்புகழ ஓங்கும் வேலூர்தனில் மேவும்
ஐயன்முத்துக் குமரன் உய்யா மையலின் நின்று -தைய

சரணம்

நாடி உருகும்வேளே மோடிசெய்யலாமோடி
போடி கல்யாணிராகம் பாடி உல்லாசமாக
வேடிக்கை யாகவிளையாடிக் காங்கேயனுடன்
கூடிக் கலந்தணைய வாடி இது சமயம் -தைய

---

காங்கேயன் - கங்காதேவிக்கு மகனுன முருகன்.

## 3. ஏங்காணும் வரவர: கல்யாணி

நாயகி முருகனைப் பார்த்துக் கோபித்து, "மரியாதை கெட்டு யார் யார் வீட்டுக்கெல்லாமோ போய்வருகிறீரே; நாளாக நாளாக உம்முடைய நடத்தை ரொம்பவும் கெட்டுப் போய் விட்டது" என்கிறாள்.

ராகம்: கல்யாணி தாளம்: மிச்ரசாப்பு

பல்லவி

ஏங்காணும் வரவரக் கணிசங்கள் இல்லாமல்
இப்படிச் செய்து கொண்டீரே

அநுபல்லவி

ஆங்காணும் தென்குன்றை
ஆறுமுக வேலரே
ஆசைகொண்டாலும் மன
ரோசம் வேண்டாமோ சாமி -ஏங்

சரணம்

அந்தமாது ரதிக்கும் மேலான சிறையா
ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரையா
எந்தனுடனேகூடி இருப்பதில் குறையா
இனிமேலும் இதுவெல்லாம் சரியான துறையா
எவரும் புகழ்ந்திடக்
கவிக்குஞ் சரந்தமிழ்க் (கு)
இருநிதி யுதவும்
சரவண பவரே -ஏங்

---

கணிசம் - மரியாதை. சிறை - பருவமான மிக அழகிய பெண்.

## 4. எல்லாம் அறிவேன்: கல்யாணி

திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் முருகன்மீது சினந்து நாயகி பேசுகிறாள்: 'உம்முடைய காரியம் எல்லாம் எனக்குத் தெரியும். இங்கு வந்து ஏதோ சாகஸம் பண்ணிவிட்டு அப்படியே கம்பிநீட்டப் பார்க்கிறீர். இந்த ஏமாற்றுத் தொழில் எல்லாம் இனிமேல் நடவாது.'

ராகம்: கல்யாணி தாளம்: மிச்ரம்

பல்லவி

எல்லா மறிவேன் போமையா - தேவரீர் சேதி
இனிமேலும் நடவா தையா

அனுபல்லவி

வல்லாளரே பரங்குன்றினில் வாசரே
மாமாயம் செய்தென்னை நீர்மருவும் நடத்தை -எல்லா

சரணம்

வெல்ல வட்டுப்போல் வார்த்தை சொல்லி யென்றனை எத்தி
மின்வெட்டிற் பயணம்பார்த்து மிரட்டஉம்மாலே சத்தி
ஆகுமோ போம்உமக் கார்சொன்னார் இந்தப் புத்தி

ஆதரத்தொடு நீர் படித்திடு
சூதுவித்தை யெலாம் மறைத்தொரு
நீதமுற்றவர் போல மெய்ப்புடன்
ஓதுமித்திர பேதத்தின் தொழில் -எல்லா

---

வல்லாளரே - சக்தி வாய்ந்தவரே. சேதி - நடத்தை. வெல்லவட்டு - சர்க்கரை வட்டு. மின் வெட்டிற் பயணம்பார்த்து - மின் வெட்டைப் போல் அப்படியே பயணம் பார்த்து. ஆதரத்தோடு - ரொம்ப அக்கறையோடு. நீதம் உற்றவர் போல - ரொம்ப யோக்கியர் போல.

## 5. ஏத்தைக் கண்டு நீ: கல்யாணி

குழந்தைப் பருவத்திலுள்ள ஒரு பெண் சிவபெருமானைக் கண்டு காதல்கொண்டு விடுகிறாள். இதை அறிந்த செவிலித் தாய்க்கு ஒன்றும் விளங்கவில்லை. தன் அருமைப் பெண்ணைப் பார்த்து "ஏன் அம்மா, இந்தக் குழந்தைப் பருவத்திலேயே சிவபெருமான் மேல் ஆசை கொண்டுவிட்டாய். என்னத்தைக் கண்டு விட்டாய் அவரிடத்தில் இப்படி ஆசைகொள்ள?"

ராகம்: கல்யாணி தாளம்: ரூபகம்

பல்லவி

எத்தைக்கண்டுநீ இச்சைகொண்டாய் மகளே
என்கண்ணே பெண்ணே நீ இப்போதே

அனுபல்லவி

சுத்தப் பயித்தியக்காரன் கங்காதரன்
தோகையே முன்னவன் பேயுடனுடிய
தொந்திக்கோ—பழுங்
கந்தைக்கோ—ஏறும்
நந்திக்கோ—செய்யும்
விந்தைக்கோ—நீ -எத்தை

சரணம்

மாமனு மாமியும் ஒன்ருய்ச் செய்கின்ற
வரிசைப் பெருமைக் கோ
சோமனைச் சிரசில் அணிந்(து) ஒருகண்
துலங்கும் நெற்றிக் கோ
காமனைவென்றவர் ஆலத்தைஉண்டு மார்க்—
கண்டனுக்காகவே சண்டனை உதைத்த
காலுக்கோ—சாம்பல்
மேலுக்கோ—கானை
வாலுக்கோ—கரித்
தோலுக்கோ—நீ -எத்தை

## 6. எத்தனை சொன்னாலும்: சாவேரி

குமரேசனாகிய முருகன், ஒரு பெண்மீது எவ்வளவோ ஆதரவுடன் இருக்கிறார்—அப்படி இருந்தும்—அந்தப் பெண்—அவருடன் பிணங்கிக்கொண்டிருக்கிறாள். தாயானவள் எவ்வளவோ சொல்லிப் பார்க்கிறாள். மகள் கேட்கிறதாக இல்லை. மகளுக்குரிய ராங்கித்தனத்தைக் கண்டிக்கிறாள் தாய்.

ராகம்: சாவேரி தாளம்: ஆதி

பல்லவி

எத்தனை சொன்னாலும் தெரிகிலை அவருடன்
ஏன் பிணங்கிக் கொள்வாய் மகளே

அனுபல்லவி

அத்தனளித்த குமரேசர் வைதாலும் என்ன
ஆத்திரப் படுகிறாய் பெண் புத்தியாலே
அன்புள்ளபோது கோபம் இருக்குமென் னதனாலே
ராத்திரி ராமாயணம் கேட்டும் அப்பாலே
ராமருக்குச் சீதைமுறை என்னஎன் பதுபோலே -எத்

சரணம்

கொண்டவர் நயத்திலும் பயத்திலும் சொல்வார்
கோதையே பொத்துக்கொண்டு போனதென்னடி
சண்டை உனக்குப் பாலும் பழமோடி குடிகேடி
தாய்பே ரெடுப்பாய் வெகுநேர்த்தி யாகவேதான் -எத்

2.

மீன்விழியாளே உனக்கா இந்தத் துடுக்கு
விரலத்தனையுண்டு ஏனிந்த முடுக்கு
நானொருத்தி யிதற்கெல்லாம் போடாவிட்டால்த் தடுக்கு
நானும்ஒரு பெண்என்று நீ குலுக்குவாய் அடக்கு -எத்

## 7. பதறி வருகுது : காம்போதி

நாயகி பழனி வேலவரிடத்தில் ஒரே மோகமாய் இருக்கிருள். மனசெல்லாம் அவர் செய்யும் சல்லாபத்திலேயே லயித்து நிற்கிறது. இந்த வேளையில் ஒரு தோழி வந்து என்னவெல்லாமோ விளையாட்டுப்பண்ணிக்கொண்டிருக்கிருள். வேறு என்ன காரியங்களைப்பற்றியோ உல்லாசத்தோடு குலுக்கி மினுக்கியெல்லாம் நாயகியிடம் பேசுகிருள். இது ஒன்றும் நாயகிக்குப் பிடிக்கவில்லை. ஏதோ பராமுகமாக இருக்கிருள். அது காரணமாகத் தோழியும், இவளோடு எப்படி இருக்கிறது என்று எண்ணி, தன் வீட்டிற்குத் திரும்பப் பார்க்கிருள். அவளைத்தடுத்து "எப்படி யெல்லாமோ மனம் பதறி வருகிறது. நீ இப்போதே போய் முருகனைக் கூட்டிவா" என்று நைந்து பேசுகிருள் நாயகி.

ராகம்: காம்போதி தாளம்: ரூபகம்

பல்லவி

பதறிவருகுது உருகு (து) என்னுவி பதைக்குதே, வகை
சொல்லடி — சற்றே
நில்லடி — மனம்
கல்லோடி — அடி,
தளுக்குக் குலுக்கு மினுக்கென்ன போடி -பதறி

அநுபல்லவி

எதிரில்லாத பழனி வேலவ ரிடத்தினில், கருத்தை வைத்தபின்
ஏதோ மதன்கணை மார்பினிற் பாயுதே
எந்தன் துரை கந்தஸ்வாமியைக் கூட்டிவா -பதறி

சரணம்

வாடியெந்தன் வடி வேலரைக் கூட்டிவா
கூடிக் குலாவி மருவி விளையாட
பாடுவார் காம்போதி மாயப் பொடி
போடுவார் என்மீது — அவரைப் போல்
சடுஜோடு உண்டோடி
பிடித்தார் எந்தன் கை
கொடுத்தார் மாணிக்கம்
நாடியவர் கேட்ட செஞ்சொற் பதம்பாடி
மோடிசெய்யாமலே தேடி அழைத்துவா. -பதறி

## 8. இவன் யாரோ: காம்போதி

ஸ்ரீ ரெங்கநாதர் தேரில்ப் பவனி வருகிறார். நாயகியும் தோழியும் தெருவாசலுக்குப் போகிறார்கள். சுவாமி அழகில் ஈடுபட்டவளாய் காதல்கொண்டு தோழியிடம் கேட்கிறாள் நாயகி. 'எங்குங் காணாத அழகோடு கூடிய இவன் யார் என்று தெரியவில்லை. மார்பிலே அபூர்வமான பதக்கத்தை அணிந்திருக்கிறான். அழகாய்த்தான் இருக்கிறது. ஆனால், பாதத்திலே ஒரு மங்கையும் (பூமாதேவி) பக்கத்திலே ஒரு மங்கையும் (லக்ஷ்மி தேவி) துளசிமாலை அணிந்த மார்பிலே ஒரு மங்கையும் (ஜயலக்ஷ்மி) எதற்காக அணிந்திருக்கிறானோ தெரியவில்லையே! அடடா, இவன் தான் எனக்கு நாயகனாக என் தவப்பயனாய் வாய்த்திருக்கிறான்.'

ராகம்: காம்போதி தாளம்: ஆதி

பல்லவி

இவனாரோ அறியேனே — சகியே
யாதொன்றும் தெரியேனே

அனுபல்லவி

திவிலொளி மணிக் கவுத்துவமணிந்துகொண்டு
தேரி லேறியே சிங்காரப் பவனிவாரான் -இவன்

சரணம்

பாதத்தி லொருமங்கை
பக்கத்தி லொருமங்கை
சீதத்துளவம் பூண்ட
திருமார்பில் ஒருமங்கை
ஏதுக்கா யணிந்தானோ
இவன்தான் என்பெருமானோ
சாதித்து நான்செய்த
தவப்பயனாய் வந்தானோ -இவன்

## 9. மனதறியாமல்: காம்போதி

ஒரு பெண் தில்லே நடராஜரைப் பார்த்தாள். முதலில் பார்க்க நன்ருய் இருக்கிருர் என்ருள். தினந்தோறும் பார்த்துக் கொண்டே யிருந்தாள். அழகாக இருக்கிருர் என்று சொல்லத் தலைப்பட்டாள். பிறகு, தனக்குத் தெரியாமலே நாளடைவில் காதல் கொண்டுவிட்டாள். சதா அவருடைய நினைவிலேயே இருக்கிருள். நடக்கமுடியவில்லை. நினைவு வந்த மாத்திரத்தில், பெருமூச்சு எறிகிருள். இதை யெல்லாம் தெரிந்த மற்றப் பெண்கள் தன்னைப்பற்றி வம்பு பேசுவர்களே என்று எண்ணு கிருள். இதற்கெல்லாம் ஈடாக நடராஜமூர்த்தி தன்னை மணந்து கொண்டால் நன்ருய் இருக்கும். ஆனலும் எங்கே அவன் மணக்கப் போகிருன். இந்த ஆசையால் எல்லாம் என்ன பயன் கிடைக்கும் என்று நொந்து கொள்ளுகிருள்.

ராகம்: காம்போதி தாளம்: ஆதி

பல்லவி

மனதறியாமல் மையல் கொண்டேன் — கொண்ட
மையலுக் கென்னபலன் கண்டேன் -மன

அனுபல்லவி

தினமும் கிருபைபுரியும் நேசர் — தில்லைச்
சிவகாமி மகிழ்ந்திடும் திருநடராஜர் -மன

சரணம்

மனதுள்ளதாய்க்கு வெறுப் பாச்சே — இனி
வரவர நிஷ்ட்டூரப் பேச்சே
நினைத்துக் கொண்டால்ப் பெருமூச்சே — பருவ
நேரிழையார்க் (கு) ஈதெல்லாம் ஏச்சே -மன

## 10. நடமாடித்திரிந்த: காம்போதி

காலில் ஏதோ சுளுக்கோ, புண்பாடோ, வாதப் பிடிப்போ இருந்துவிட்டால் அதைத் தளத்தில் வைக்கமுடியாது. நடராஜரது நடனத்தில், வலது பாதம் கீழே ஊன்றியது. இடது பாதம் வீசி ஆடுவது. அதுகாரணமாக பிம்பத்தில் இடது காலைத் தூக்கியவாரே காட்டி இருக்கிறது. அந்த நடனத்தில் ஈடுபட்ட பக்தர் அந்தத் தூக்கிய பாதத்திற்கு என்ன என்ன கற்பனைகள் எல்லாமோ ஏற்றி விளையாடுகிறார்; ஆனந்திக்கிறார்.

ராகம்: காம்போதி தாளம்: ஜம்பை

பல்லவி

நடமாடித் திரிந்தஉமக் (கு) இடதுகால் உதவாமல்
முடமானதே தென்று சொல்லுவீர் ஐயா

அனுபல்லவி

தடமேவும் தில்லைநகர் மருவு பேரண்டத்தில்,
சடை விரித்தாடியவா தேவர்சிற் சபையறிய -நட

சரணம்

திருநீற்றைச் சுமந்தென்ன நெருப்பான மேனிதனில்
சீதளத்தினுல் மிகுந்த வாதகுண மோ
ஒருமையுடன் மார்க்கண்டர்க் குதவியாய் மறலிவிழ
உதைக்கச் சுளுக்கேறி யுண்டகுண மோ
பரவையவள் தெருவாசற் படியிடறிற்றோ—எந்தன்
பாபமோ என்சிவமே மூவர்க்கும் முதல்வனன்றோ -நட

## 11. திருவொற்றியூர்: அடாணு

திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள தியாகராஜரை சிறு பிராயத்திலிருந்தே ஒரு பெண் தெரிசித்து வந்தாள். நிதம் நிதம் தெரிசித்தபோதிலும் அவருடைய பாதத்தைமாத்திரம் தெரிசித்தாளே ஒழிய உருவத்தைப் பார்த்தாள் என்றில்லை. ஒருநாள் முழு உருவத்தையுமே கண்டுவிட்டாள். அவ்வளவுதான் ஒரே காதல் வெறிக்கு உள்ளாய்விட்டாள். பார்த்த இடமெல்லாம் அந்த உருவமாகவே தோற்றுகிறது. இவ்வளவு அனுபோகத்தையும் தோழியிடம் சொல்லி தொந்தம் விடாதபடி செய்யவேண்டும். அதனுல் அவளுக்கு எவ்வளவோ புண்ணியமுண்டு என்பதாகச் சொல்லுகிருள்.

ராகம்: அடாணு தாளம்: ரூபகம்

பல்லவி

திருவொற்றியூர்த் தியாகராஜன்
சித்விலாச நாதனடி

அனுபல்லவி

பருவத்திலே அவர்பாதமே
பணிந்ததல்லால் ஒன்றறியேன்
உருவத்திலே அவரைக்கண்டபின்
ஓகோ நான்என்னசெய்வேன் -திரு

சரணம்

பார்த்தகண்கள் பார்த்ததுபோல்
பார்த்தயிட மெலாம்எனக்குத்
தோற்றுதடி அடியே
தோகையே ஒரு வழிசொல்ல டி
ஆத்திரத்தால் மனங்கலங்கி
ஆசையாகி மெய்மெலிந்தேன்
தோத்திரம்செய்து அவர்க்கெ னக்குமோர்
தொந்தம்விடாமல்ச் செய்நீ சுகிர்தமுண்டு -திரு

---

சித்விலாசநாதன் - ஞானமயமாய் எங்கும் நிறைந்த நாதன். பருவத்திலே - சிறு பருவத்திலே. அவர்க்கெனக்கும் - அவருக்கும் எனக்கும். ஓர் தொந்தம் விடாமல் செய் நீ - ஒரு சம்பந்தம் உண்டாக்கி அதுவும் விட்டு விடாதபடி செய்வாயாக நீ. சுகிர்தமுண்டு - உனக்குப் புண்யமுண்டு.

திருவாரூர்

## 12. என்னேரமும்: தோடி

நடராஜப் பெருமான் இரு கால்களையும் உபயோகித்தே நடனமாடுகிறார். ஒரு காலை மிதித்தும் மறு காலை வீசியும் ஆடுகிறார். எங்கும் நிறைந்த வெட்ட வெளியில் அநாதி காலந் தொட்டு இறுதியில்லாத ஊழிக்காலம் வரையும் ஆடுகிறார். ஒரு காலை எடுத்து விசி மறுபடியும் மிதிப்பதற்குள் எத்தனையோ யுகங்களாகின்றன. இடையிட்ட நமக்கு ஏதோ தூக்கிய பாதம் ஒரு நிலையிலேயே இருக்கிறதாகத் தோற்றம். இந்தத் தோற்றத்தை உபசரித்து ஹாஸ்யமாக காரணங் கற்பிக்கிறார் ஒரு பக்தர்.

ராகம்: தோடி தாளம்: ஆதி

பல்லவி

என்னேரமும் ஒருகாலைத் தூக்கி நொண்டிக்
கொண்டிருக்கிற வகை யேதையா

அநுபல்லவி

பொன்னுடர் போற்றும் தில்லை
நன்னாடர் ஏத்தும் செம்பொன் - அம்பல வாணரே
இன்னும் தானும் ஊன்றாமல் -என்

சரணம்

எக்கியநெருப்ப விக்க தக்கன்வீடு நடந்தோ
எமனை உதைத்தபோ (து) எதிர் சுளுக்கேறி நொந்தோ
சிக்கெனவே பிடித்துச் சந்திரனை நிலத்தில்த்
தேய்த்தபோதினில் உறைந்தோ
உக்ரசாமுண்டி யுடன்வாதுக்காடி யசைந்தோ
உண்டநஞ் (சு) உடம்பெங்கும் ஊரிக்கால்வழி வந்தோ
தக்கபுலி பாம்பிரு வருக்கும்கூத் தாடியாடிச்
சலித்துத்தானோ பொற்பாதம் வலித்துத்தானோ-தேவரீர் -என்

## 13. தாயே யசோதா: தோடி

கிருஷ்ணனை அருமையாய் வளர்க்கிறள் ஆயர்குலத்தைச் சேர்ந்த யசோதை. பொதுவாக குழந்தைகளிடத்தில் எல்லா மகளிருக்கும் ஆசையுண்டு. அந்த ஆயர்பாடியிலுள்ள பெண் களுக்கு குழந்தை கிருஷ்ணனிடத்தில் ஏற்பட்ட ஆசையை இப்படி அப்படியென்று சொல்லமுடியாது. ஒரே மோகந்தான். வெறிதான். இந்த வெறியில் குழந்தையைப்பற்றி என்ன வெல்லாமோ செய்கிறன் என்று சொல்லுவார்கள். என்ன வெல்லாமோ வம்பு செய்கிறன் என்பார்கள். ஏதோ அவன் முழு ஆண்பிள்ளை போலவும் வம்பான காரியங்களைச் செய்வது போலவும் அருமையும் தமாஷும் கலந்தவண்ணமாக யசோதை யினிடம் சொல்லுவார்கள். அப்படி ஒரு பெண் வந்து சொல்லு கிறதைக் கவியில்ப் பார்க்கிறேம்.

ராகம்: தோடி தாளம்: ஆதி

பல்லவி

தாயே யசோதாஉன்றன் ஆயர்குலத் (து) உதித்த
மாயன் கோபாலகிருஷ்ணன் செய்யும்ஜாலத் தைகேளடி -தாயே

அனுபல்லவி

தையலே கேளடிஉன்றன் பையனைப்போலவே இந்த
வையகத்தில் ஒருபிள்ளை அம்மம்மநான் கண்டதில்லை -தாயே

சரணம்

காலினில்ச் சிலம்புகொஞ்ச,
கைவளைகுலுங்க — முத்து
மாலைகள் அசையத் — தெரு
வாசலில் வந்தான்
பாலனென்றுதாவி அணைத்தேன்
அணைத்த என்னை
மாலையிட்டவன்போல்
வாயில் முத்தமிட்டாண்டி
பாலன் அல்லடி உன்மகன்
ஜாலமாகச் செய்வதெல்லாம்
நாலுபேர்கள் கேட்கச்சொல்ல
நாணமாகுதேயடி -தாயே

## 14. யார் போய்ச் சொல்லுவார் : தோடி

ஒரு பெண் திருத்தணிகையிலுள்ள முருகனிடத்தில் காதல் கொண்டுவிட்டாள். அது காரணமாக, செயல் எல்லாம் மாறுபட்டு ஆகாரமும் ஏற்காமல்ப் போய்விடுகிறது. அன்னை இதைப்பார்த்து மோசம் வந்துவிட்டதே என்று கருதி, 'அங்கே போகாதே இங்கே போகாதே முருகனோடு உனக்கு என்ன பேச்சு' என்றெல்லாம் சதா கண்டிக்கிருள். தனக்குத் துணையாக இருந்த பாங்கியும் அன்னைக்காக ஒரு வேவுகாரியாய் இருக்கிருள். யாரையாவது தூதனுப்பலாம் என்ருல் ஒருவருமே இல்லை. இந்த நிலையில் பூந்தோட்டத்திலுள்ள தாமரைத் தடாகத்துப் படியில் உட்கார்ந்து ஒரே கவலையிலிருக்கிருள். அந்த நேரம் அவளோடு பழகியுள்ள அன்னப் பறவை நீந்திவந்து அவள்முன் நிற்கிறது. காதல் வெறி காரணமாகத் தன்னுடைய கஷ்டத்தை அந்த அன்னத்தினிடமே சொல்லுகிருள்.

ராகம் : தோடி — தாளம் : மிஸ்ரம்

பல்லவி

யார்போய்ச் சொல்லுவார் யெனக் (கு)
ஆனபேரையும் காணேன்
அன்னமே நான்என்னசெய்வேன் -யார்

அனுபல்லவி

சீரோங்கிய தணிகை மாமலை தனில்வாழும்
செய்ய மறைதுதி
துய்யன்எனும் - உயர்
மெய்யன்எனும் - முரு
கையனுக் கிதை -யார்

சரணம்

மூத்த அன்னையோ பொல்லாப் பாதக நீலியே
முழுமாயப் பாங்கியும் அதற்கனு கூலியே
நாளுக்குநாள் அன்னமும் பாலும் வெறுக்குதே
நன்ய முனிவர்கள்
தின்யஎனும் - உயர்
புன்யஎனும்- சுப்ர
மன்யனுக் (கு) இதை -யார்

# 15. வருவார் அழைத்துவாடி : பியாகடை

நடராஜப் பெருமான் சிதம்பரத்திலுள்ள பொற்சபையில் ஆடுகிறுர். ஆனுலும், பேரண்டம் முழுவதும் ஆடுகிறவர்தான் அவர். ஞானிகள், எந்த இடத்திலுமே இருந்து அவர் நடனத்தைக்கண்டு உள்ளங்களிப்பார்கள். ஞானிகளுடைய விசாலமான உள்ளத்தில் நடனம்புரிகிறவர் அவர்.

*　　*　　*

வடலூரிலுள்ள ஒரு பெண் நடராஜருடைய நடனத்தைக் கண்டுகளித்து அவரோடு கலக்கவேண்டும் என்று எண்ணுகிருள். தோழியைப் பார்த்துச் சொல்லுகிருள். 'ஏதோ பொன் அம்பலத்தில் ஆடுகிறவர் நம்முடைய நாயகர் என்று நீ எண்ணுதே. அவர் ஆடுவதற்குச் சரியான இடம் பெருவெளிதான். என்னுடைய இதயமாகிய பெருவெளி இங்கே இருக்கிறதென்று சொல். அதாவது, வடலூரில் வடதிசையில் நான் இருக்கிறேன் என்று சொல். நிச்சயமாக இங்கே அவர் வருவார்'.

ராகம் : பியாகடை　　　　தாளம் : மிஸ்ர சாப்பு

பல்லவி

வருவார் அழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே
　வந்தால்ப் பெறலாம் நல்லவரமே

அனுபல்லவி

திருவார் பொன்னம்பலத்தே செழிக்கும் குஞ்சிதபாதர்
　சிவசிதம்பர போதர் தெய்வ சபாநாதர்　　-வரு

சரணம்

சிந்தை களிக்கக்கண்டு சிவானந்த மதுவுண்டு
　தெளிந்தோர் எல்லாரும்-தொண்டு செய்யப் பரிவு கொண்டு
அந்தவெளி யில்நடம் ஆடத் துணிந்தாரே
　அதைவிடப் பெருவெளி இருக்குதென் ருலிங்கே　　-வரு

---

வடலூர்: கடைசியாக, ராமலிங்க சுவாமிகள் தங்கிய இடம். இந்த ஸ்தலத்திலிருக்கும்போது நடராஜப் பெருமானது திருவருள் பூரணமாய்க் கிடைத்தது. சிற்சபை என்று ஒரு கோயில் கட்டியிருக்கிறுர். குஞ்சிதபாதர்: தூக்கிய திருவடியை உடையவர்.

## 16. இனி மேலவருக்கும் : பைரவி

சிகண்டிமலை க்ஷேத்திரத்திலுள்ள முருகன்மீது ஒரு பெண்ணிற்கு அதி தீவிரமான காதல் உண்டாகிவிட்டது. முருகனும் ஒழுங்கு தவருது வந்துபோய்க் கொண்டிருக்கிருர். சில நாள் அவர் வரவில்லை. ஏதோ வேறு ஒரு பெண்ணிடம் சிநேகம்—வைத்துக்கொண்டிருக்கிறதாகப் பிராபரியாய் கேள்விப் படுகிருள். வந்துவிட்டது கோபம். தோழியிடம் பேசுகிருள்.

ராகம்: பைரவி தாளம்: மிஸ்ரம்

பல்லவி

இனி மேலவருக்கும் எனக்கும் - ஒருபோதும்
இணங்காதடி மானே

அனுபல்லவி

கனிமிகு தண்தலை
  சூழுஞ் சிகண்டிமலை
கந்தசாமி வலிய
  வந்துநலஞ் சொன்னுலும் -இனி

சரணம்

வீணிலேன் வாய்மொழி
  போக்குருய் - பெண்ணே
மிகவும் என்மனதைப் - புண்
  ஆக்குருய் - யாரும்
கோணிக் கொடுத்துக் கோடி
  கிடைப்பதில் - கோணமல்
காணிகிடைத்தால்ப் போதும்-பொன்
  கைக்கா யிரந் தந்தாலும் -இனி

---

தண்தலை-சோலை.

## 17. வேலவரே உமைத்தேடி : பைரவி

ஒருநாள் இரவு பட்டப்பகல்போல் நிலவு ஒளிவீசுகிறது. இளம் பெண் ஒருத்தி வெளியே வந்து தெருவழியாய்ப் போகிறவர்களை 'வேலவரைக் கண்டீர்களா, வேலவரைக் கண்டீர்களா' என்று ஆத்திரத்தோடு விசாரிக்கிருள். தெருவில்க் கொஞ்ச தூரம் நடந்து வந்து வேலவரைத் தேடுகிருள். ஜன்னலி லிருந்தும் அப்படி இப்படியுமாகப் பார்க்கிருள். விடிகிறவரைக்கும் அவளுக்கு இதே ஜோலியாய்ப் போய்விட்டது. காதல் விஷயத்தில் முருகனுக்கு உளவாய்உள்ள ஒரு மாது இதை எல்லாம் பார்த்து பெண்ணிடம் பரிவுகொண்டு, முருகனிடம் போய்க் கேட்கிருள். "இந்தப் பெண் யார் ஐயா வேலவரே. வகையென்ன வென்று தெரியவில்லையே. கொஞ்சம் எனக்குச் சொல்லுமே" என்று.

ராகம்: பைரவி தாளம்: ஆதி

பல்லவி

வேலவரே உமைத்தேடி ஒருமடந்தை
விடியு மளவும் காத்திருக்கிற வகையென்ன

அனுபல்லவி

வாலிபமும் சேல்விழியும் வில்லுப் புருவமும்
வடித்த நூலிடையும் மதிவதனமும்
மேலும் அவள்மேனி பசும்பொன்னிறம்
மின்னற்கொடியாள்
அன்னநடையாள் - ஒயிலாகவே -வேல

சரணம்

சித்திரப்பொற் பலகணி வாசலிலே வந்துநின்று
தியங்கி மதிமயங்கி திகைத்துத் தவிக்கிருள்
குத்திரம் குடிலம் என்றும் தன்தலை யெழுத்தென்றும்
குமுறிக்குமுறி உருகிருள் மிகவேதான் -வேல

---

மடந்தை - இளம் பெண். சேல்விழி - மீன்போன்ற கண். பலகணி - ஜன்னல். குத்திரம் குடிலம் என்றும் - முருகன் வாராததற்கு யாரோ செய்த மோசடி, சூது என்றும்.

## 18. முகத்தைக்காட்டி: பைரவி

கடவுள் எங்கும் நிறைந்தவராய் எண்ணிறந்த குணங்களை யுடையவர். இந்த நிலையில் நாம் அவரை முழுதுங் காண முடியாது. ஏதோ, ஒன்றிரண்டு அம்சம் தெரிந்தாலே பெரிய காரியம்

*     *     *

திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகேசன்மேல் மோகங் கொண்டவளாகிய ஒரு பெண் அவரைப் பார்த்து அனுபவிக்க வருகிருள். தியாகேசர் தன் முகம் மாத்திரம் தெரியும்படியாக எழுந்தருளியிருக்கிருர். முழுமேனியும் பார்க்க முடியவில்லை. அந்த ஏமாற்றத்தில் வருந்துகிற பாவம்.

ராகம்: பைரவி    தாளம்: மிஸ்ரம்

பல்லவி

முகத்தைக்காட்டித் தேகம் முழுமையும் காட்டாத
மூடுமந்திரம் ஏதையா

அனுபல்லவி

ஜகத்திலதிகமான ஆரூரில் வாசரே
செழித்தமேனியில் ஊனம் உண்டோ தியாகேசரே -மு

சரணம்

சாயரட்சையில் வந்து சலிக்கப் பார்ப்போ மென்ருல்
சாய்ந்தவண்ணம் செவ்வந்தித் தோட்டைக்காட்டி மயக்கி
மாய விதானமுள்ள மந்தகாசமுடன்
மான்மழு வேந்திய கரத்தைக்கூட மறைத்து -மு

---

ஜகத்தில் அதிகமான ஆரூர்: உலகத்தை ஒரு தட்டிலும் ஆரூரை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்தால் ஆரூரே அதிகமான நிறையுள்ளது. சலிக்கப் பார்ப்போம் - திருப்தியுண்டாகும்படி பார்த்துக்களிப்போம். சாய்ந்த வண்ணம் செவ்வந்தித் தோட்டைக் காட்டி: ஒரு பக்கமாய்ச் சாய்ந்திருப்பதின் காரணமாக செவ்வந்தித்தோடு மாத்திரம் தெரிகிறது.

## 19. பேயாண்டிதனைக் கண்டு: சாரங்கா

உலக சரித்திரத்தைப் பார்க்கும்போது கடவுளுடைய அருள் நாகரிகத் தன்மையுடையவர்களுக்கு மாத்திரமல்லாமல், சாமான்ய அநாகரிகமான ஜனங்களுக்கும் கிடைத்திருக்கிறது தெரியவரும். என்றும் இது உண்மை.

* * *

சிவபெருமானது கோலம் பேயாண்டியைப்போல் இருக்கிறது. அந்தக் கோலங்கொண்ட சிவபெருமான்மேல் ஒரு பெண் காதல்கொண்டு விட்டாள். காதலின் தத்துவ மறியாத ஒரு தோழி, நாயகியைப் பார்த்து என்ன என்ன வெல்லாமோ கேட்கிறாள்.

ராகம்: சாரங்கா | தாளம்: மிஸ்ரம்

பல்லவி

பேயாண்டி தனைக் கண்டு நீயேண்டி மையல் கொண்டாய்
பெண்களுக் கழகா மோ

அனுபல்லவி

மாயாண்டி சுடலையில் வாழ்வாண்டி காளியுடன்
வாதாடிச் சூதாடி வழக்காடி நின்றாண்டி -பேயா

சரணம்

பாரில் முப்புரந் தன்னில்ப் பல்லை யிளித்தாண்டி
பஞ்ச பாணனைக் கண்டு பரக்க விழித்தாண்டி
ஊரூராய்ப் பிச்சையெடுத்துத் திரிந்தாண்டி
உற்றார் பெற்றார் ஒருவரும் அற்றாண்டி -பேயா

---

பாரில் முப்புரம் - இந்த உலகத்தில்தானே மூன்று கோட்டைகளை (காமம், வெகுளி, மயக்கம்) கட்டிக்கொண்டு ஞான மார்க்கங்களில் செல்பவரை எதிர்க்கிறார்கள், காமம் வெகுளி மயக்கமாகிய அரக்கர்கள். பஞ்சபாணனை பரக்க விழித்தாண்டி - நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனை எரித்தவன்.

## 20. இனி என்ன பேச்சு: ஸகாணு

வேளூர் முருகனுக்கும் ஒரு பெண்ணுக்கும் மிக்க காதல். ஒருநாள் அந்தப் பெண் ஊட ஆரம்பித்துவிட்டாள். முருகன் மேல் குற்றமாகச் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. ஒருநாள் ஏதோ காரியமாக வராமலிருந்துவிட்டார். அதைக் குறித்துச் சொல்லுகிருள். "நான் தனியே இருக்கிறேன் என்பதைச் சிறிதும் கவனியாமல் அப்படியே இருந்துவிட்டீரே வீட்டில். இந்தத் தப்பிதம் அப்படி லேசானதா, கொஞ்சம் யோசித்துப் பாரும். சரி, சரி உம்மோடு இனி என்ன பேச்சு இருக்கிறது."

ராகம்: ஸகாணு தாளம்: ரூபகம்

பல்லவி

இனிஎன்ன பேச்சிருக்குது போம் போம்
எல்லோர்க்கும் நகைப் பாச்சுது

அனுபல்லவி

தனியே வைத்திங்கே வாராதிருந்த தோர்
தப்பிதம் போதுமே முத்தைய வேலரே -இனி

சரணம்

மனதிற்கிசைந்த படியாச்சே
மட்டுமீறிப் போச்சே
சுகந்த குந்தள வள்ளிம ணாளரே
சுப்பராமன் தமிழ்க் கிசைந்த வேலரே -இனி

## 21. என்னிட நடத்தைக்கும்: சங்கராபரணம்

வேலூர் ஸ்தலத்தில் எழுந்தருளியிலுள்ள முருகனிடத்தில் நிரந்தரமான காதல் வைத்துள்ள ஒரு பெண் சொல்லுகிருள். "நீர் என்னிடத்தில் எவ்வளவோ அபிமானமா யிருந்தீர். என்ன உறுதி யெல்லாமோ சொன்னீர். நீர் ஆடிய படியெல்லாம் நானும் ஆடித்தீர்த்தேன். அதில் ஒரு குறைவும் இல்லை. ஆனால், இப்போதோ, எல்லாம் ஏமாற்றமா யிருக்கிறது."

ராகம்: சங்கராபரணம் தாளம்: மிஸ்ரம்

பல்லவி

என்னிட நடத்தைக்கும் தேவரீர் மோடிக்கும்
எந்தவிதம் சேரும்சாமி

அனுபல்லவி

கன்னல் செழிக்கும் வேலூர் முத்துக் குமரேசரே
இன்னம் என்ன பேச்(சு)உம் எண்ணம் வேறதாச்சு -என்

சரணம்

ஆதியிற் சொன்னதெல்லாம் வெட்ட வெளிச்சமாச்சு
ஆடியாடச் செய்தது ஆற்றிற்கரைத்த புளிபோ லாச்சு
சூதுக்காரியவள் துர்ப்போதனை மிகவாச்சு
சொந்தமென நம்பும்என் அதிர்ஷ்டம் இப்படியாச்சு -என்

## 22. வருவாரானல்: முகாரி

உலகத்திலுள்ள ஆன்மாக்கள் உலகப்பற்றுக்களிடையே சிக்கிக்கிடக்கிருர்கள். இப்படிச் சிக்குண்டு கிடக்கும்போதே இதைவிட்டு வெளியேறி, இறைவனேடு இரண்டறக் கலக்க வேண்டும் என்று எண்ணுகிருர்கள். ஆன்மாக்களை நாயகி என்றும் உலகப்பற்றுக்களை மணந்த புருஷன் என்றும் கடவுளை சோரநாயகன் என்றும் கற்பித்து கூறுவது நம்முடைய முன்னேர்கள் வழக்கு.

குன்றக்குடி முருகன்மீது ஒரே மயக்கமாய் இருக்கிருள் ஒரு நாயகி. புருஷனுக்கும் மற்றும் வீட்டிலுள்ளவர்களுக்கும் தெரியாமலே தன்னிடம் முருகன் வரவேண்டுமென்று தோழியிடம் சொல்லியனுப்புகிருள். அவரே தன் வீட்டுக்கு வரவேண்டும். தான் வீட்டைவிட்டு வர இயலாது என்றும் சொல்லுகிருள்.

ராகம்: முகாரி தாளம்: மிஸ்ரசாப்பு

பல்லவி

வருவாரானல் வரச்சொல்லு நானங்கே
வரக்கூடாதடி மானே

அனுபல்லவி

குருதி கைவேல்பிடித்து உறுதிவிளங்கிய-தென்
குன்றக்குடிக் குமரர் இன்றைக்கென் வளவுக்கு -வரு

சரணம்

கொண்ட கணவன்செய்யுந்தண்டனைகள் பொல்லாது
குடிப்பெண்கள் அதற்கஞ்சி நடக்கவேண்டுமல்லாது
துண்டரீகமாய் அகங்கொண்டால் அதுசெல்லாது
சொல்வோர் வசையோ கணக்கினில் நில்லாது
ஒண்டியாய் வருகிருேம் என்று மனங்கோணுமல்
ஓங்குமுயர் ஜவ்வாது புனுகுவாடைதோணுமல்
வண்டடர்தே மலர்மாலை மிகப்பூணுமல்
மையிருளில்ப் பாரிகாரர்க் கண்ணிற்காணுமல் -வரு

---

துண்டரீகமாய் அகங்கொண்டால் - மற்றவர்களை உதறித் தள்ளிவிட்டு தன் இஷ்டம்போல் செய்கிற காரியம். வண்டு அடர்தே மலர் -வண்டு மொய்க்கின்ற தேன் கசியும் மலர். பாரிகாரர் - காவலாளர்.

## 23. காலைத் தூக்கி: எதுகுல காம்போதி

தில்லை நடராஜர் எட்டுத்திசையும் வீசும்படியாகக் காலைத் தூக்கி ஆடுகிறார். அவருடைய மகன் முருகனும் சாமான்யமான பிள்ளையா? பாதாளத்துக்கும் வானத்துக்கும் ஓங்கி நிற்கும் வேலைத்தூக்கிய பிள்ளை. மேலும் நடராஜர் எதை எல்லாம் தூக்குகிறார்? மானைத் தூக்குகிறார். மழுவைத் தூக்குகிறார்; கங்கையையும் திங்களையும் சடையில்த் தூக்கி இருக்கிறார். இடது பாகத்திலோ ஒரு பெண்ணைத் தூக்கி நிற்கிறார். அத்தகைய நடராஜப் பெருமானை நோக்கி, ஒரு பக்தர் முறையிடுகிறார்.

ராகம்: எதுகுல காம்போதி தாளம்: ஆதி

பல்லவி

காலைத்தூக்கி நின்று ஆடுந்தெய்வமே — என்னை
கைதூக்கி யாள் தெய்வமே

அனுபல்லவி

வேலைத்தூக்கும் பிள்ளை தனைப்பெற்ற தெய்வமே
மின்னு புகழ்சேர் தில்லை
பொன்னம் பலத்தில் ஒரு -காலை

சரணம்

செங்கையில் மான்தூக்கி, சிவந்தமழுவும் தூக்கி,
அங்கத்திலோர் பெண்ணை அனுதினம் தூக்கி,
கங்கையைத் திங்களைக் கதித்தசடை மேல்தூக்கி
இங்குமங்கு மாய்த்தேடி இருவர்கண் டறியாத -காலை

2

நந்தி மத்தளங்கொட்ட நாரதர் யாழ்தூக்க
தொம்தோமென்று அயன்தாளம் சுருதியுடன்தூக்க
சிந்தைமகிழ்ந்து வானோர் சென்னியில்க் கரம்தூக்க
முந்தும் வலியுடைய முயலயகன் உனைத்தூக்க -காலை

---

இருவர் - திருமாலும் அயனும்.

## 24. இன்னமும் ஒருதரம் : எதுகுல காம்போதி

நடராஜப் பெருமானது நடனம் சதா ஆயுள் முழுவதுமே பார்த்தாலும் தீராத அழகு வாய்ந்தது. உண்மை இப்படியிருக்க பக்தர் ஒருவர் ஒரு தடவை பார்த்துத் தரிசித்தார். பல நாளும் தொடர்ச்சியாகப் பார்த்து அனுபவித்தார். கடைசியில் நெடுந் தூரத்திலுள்ள தன் ஊருக்கு திரும்புகிறார். திரும்புகிற நேரத்தில் 'இன்னமும் ஒருதரம்' தரிசிக்க வேண்டும் என்று ஏங்குகிறார்.

ராகம் எதுகுல காம்போதி தாளம் ஆதி

பல்லவி

இன்னமும் ஒருதரம் பார்க்க வேணும்என்று
இச்சைகொள்ளுதென்மனம்

அனுபல்லவி

பொன்னம் பலந்தனில் வாழும் சர்வேசனைப்
பூலோக கைலாச வாசனை -இன்

சரணம்

கரத்திலணியும் கபாலமும் திரிசூலமும்
கையிலேந்தும் மான்மழுவும் டமருகமும்
உரித்த புலியின் ஆடையும் கஜ சர்மமும்
ஓங்கியெடுத்த காலும்
விரித்தசடையும் கங்கையும் இளந்திங்களும்
மேனிமுழுதும் நிருகாப்பும் குறுநகையும்
பருத்த ஆதிசேஷன்மீது துயிலும்
கோபாலகிருஷ்ணன் பணியும் திருவடி -இன்

## 25. ஏதுக்கித்தனை மோடி: சுருட்டி

கடவுளுடைய அருளை எத்தனையோ ஞானிகள் அடைவதற்கு முயன்றிருக்கிறார்கள். ஆனாலும், எளிதாகக் கிடைக்கக் கூடிய காரியமா அது? கிடைக்காததற்கு எத்தனையோ காரணம் கற்பிக்கலாம். கற்பித்துப் பிரயோசனம் என்ன? யாருக்குமே தெரியாத மர்மம்தான் அது.

* * *

நடராஜப் பெருமானிடத்தில்க் காதல்கொண்ட ஒரு பெண் அவரை எத்தனையோ விதத்தில் வேண்டிக்கொள்கிறாள். அவர் திரும்பிப் பார்த்ததாகக்கூட இல்லை. அதன்மேல், தான் அவரை விளையாட்டாகச் சொன்னதை ஏதோ விபரீதமாகக் கருதி விட்டாரோ என்று புலம்புகிறாள்.

ராகம்: சுருட்டி தாளம்: ரூபகம்

பல்லவி

ஏதுக்கித்தனை மோடிதான் உமக் (கு)
எந்தன்மேல் ஐயா

அனுபல்லவி

பாதிப் பிறையைச் சடையில்த் தரித்த
பரமரே தில்லைப்பதி நடேசரே -ஏது

சரணம்

ஜாதியுந் தகப்பனுமில்லா அனாதை
என்றேனோ, பெண்ணாய்
பாதிஉடம்பாகிக் கள்ளுஞ் சுமந்திட்ட
பறையன் என்றேனோ
ஜாதிபேதமாய்ப் பிள்ளைக்கு குறவர் வீட்டில்
பெண்கொண்டீ ரென்றேனோ — மறை
ஓதிவணங்கும் நடேசரே — உம்மை
ஒப்பாரு மில்லாத
தப்பிலி என்றேனோ -ஏது

---

ஒப்பாருமில்லாத தப்பிலி - முதல்தரமான தப்பிலி. தப்பிலி - ஒன்றுக் குதவாத மனுஷன். உள் அர்த்தம் - கடவுளுக்கு ஒப்பேதுமில்லை. அவனிடத்தில் யாதொரு தப்புமில்லை.

## 26. தானே வருகிறரோ: கேதார கௌளை

வேளூர் முருகனைப் பார்க்கவேண்டும் என்று இல்லாத ஆத்திரம் வந்துவிட்டது. அவரே வருகிறரா அல்லாத பக்ஷம் அவர் இருக்கிற இடத்துக்கு நான் வரவேண்டுமா? அவரைப் போய் கேட்டுவா என்று தோழியை அனுப்புகிற பாவம்.

ராகம்: கேதார கௌளை தாளம்: மிஸ்ரசாப்பு

பல்லவி

தானேவருகிறரோ நான்வரவோ அவரைத்
தையலே கேட்டுவா போடி

அனுபல்லவி

தேனூர்மலைச் சோலைசூழ் வேளூர் முத்துக்குமரர்
திருமயில் மேற்பவனி வரும்அயிலேந்தும் வீரர் -தானே

சரணம்

காமப்பூதம் வந்து தேடித் திரியுதடி
கடிமலர்களை வாரிவாரிச் சொரியுதடி
ஆமடி கணவன்மேல் ஆசை வருகுதடி
அந்தரங்கம் எல்லாம் அவர்க்குத் தெரியுமடி -தானே

---

அயில் எந்தும் - வேல் எந்தும். காமப் பூதம் - மன்மதன். கடிமலர் வாசனை மலர்.

## 27. உன் அத்ருஷ்டம் ஸ்வாமி: தன்யாசி

முருகனை பவனிவரும்போது பார்த்த பெண் ஒருத்திக்கு அபாரமாகக் காதல் உண்டாய்விட்டது. ஒன்றும் செய்ய ஓடவில்லை. சிறிது நேரங்கழித்து தன் சேடி வந்தாள். 'சரி இவளைத் தூதனுப்பினுல் என்ன? பார்ப்போமே' என்று சேடியைக் கூப்பிட்டு முருகனிடம் போகச் சொல்லுகிருள். போய்க்கொண்டிருக்கிற சேடிக்கோ, காரியம் சித்திக்கவா போகிறது. இருந்தாலும், நம்மாலானதைச் சொல்லுவோமே என்று போகிருள். முருகனையும் பார்த்தாள். ரொம்ப ரொம்ப உருக்கமாக, தலைவி படுகிற கஷ்டத்தையெல்லாம் சொன்னுள். முருகனும் இணங்கி இரவு வருகிறேன் என்று சொல்லி விட்டார். அப்படியே தலைவியிடம் திரும்பிவந்து முருகன் வருகிறதாகச் சொல்லிவிட்டார், ரொம்ப நல்லதாய்ப் போயிற்று என்று சொன்னுள். அதற்குத் தலைவி சேடியைப் பார்த்து 'உன் சமர்த்துத்தான் என்ன அடடா, நீ எடுத்த காரியம் கைகூடாமலா போகும்' என்று உபசாரம் அடுக்கிக்கொண்டேயிருக்கிருள். சேடியானவள் சொல்லுகிருள்:

"இந்த உபசாரமெல்லாம் எனக்குப் பொருந்தாது. நான் ஏதோ போனேன். உன்னைப்பற்றி உருக்கமாகவும் பேசினேன். உன் அன்னத்தைச் சாப்பிட்ட எனக்கு உருக்கமான பேச்சு வராமலா போய்விடும். நீயும் அதிருஷ்டசாலி.எல்லாம் சேர்ந்தது. காகம் ஏறியது பனம் பழம் விழுந்தது என்னும் கதைக்குச் சரியாய்ப் போய்விட்டது. எல்லாம் உன் ஜாதகத்தின் பலன்."

ராகம்: தன்யாசி — தாளம்: மிஸ்ரசாப்பு

பல்லவி

உன் அத்ருஷ்டம் ஸ்வாமி இஷ்டம் கிடைத்தது
உபசாரம் எனக் கென்னடி

அனுபல்லவி

கன்னியே முருகன்பாற் சென்றேன் - நல்வேளை
காகமேறக் கனிவிழுந்த(து) இவ்வேளை -உன்

சரணம்

உண்டிடும் அன்ன விசேஷத் தினுலும்
உள்ளங் கனிவுற யான்சொன்ன தாலும்
பண்டுநீ செய்த பூஜா பலத்தாலும்
பழம்நழுவிப் பாலில் விழுந்த கதைபோலும் -உன்

## 28. நடனமாடினர்: வஸந்தா

நடராஜப் பெருமானது அற்புதமான, அழகான நடனத்தைக்கண்டு அப்படியே மயங்கிப்போன நாயகி, தன் அனுபோகத்தை வெகு உல்லாசமாக, கையும் காலும் ஆட்டிக் கொண்டு தோழியிடம் சொல்லுகிற பாவம்.

ராகம்: வஸந்தா தாளம்: ரூபகம்

பல்லவி

நடனமாடினர் - வெகு
நாகரீகமாகவே கனகசபையில் ஆனந்த

அனுபல்லவி

வடகைலேயில் முன்னாள்
மாமுனிக்கருள் செய்தபடி
தவருமல்த் தில்லேப்பதியில் வந்து
தை மாதத்தில்
குரு பூசத்தில்
பகல் நேரத்தில் - நட

சரணம்

அஷ்டதிசையும் கிடுகிடென்ன
சேடன் தலேநடுங்க
அண்டமதிர கங்கை துளிசிதரப் — பொன்
நாடவர் கொண்டாட
இஷ்டமுடனே — கோபால
கிருஷ்ணன் — பாட
சடையாட — அரவப்
படமாட — தோளிற்
தொடியாட
தொந்தோமென்று - பதவிகள்
தந்தோ மென்று - நட

---

தொடி - தோள் வளையும்.

## 29. அதுவும் சொல்லுவாள்: சௌராஷ்டிரம்

வேளூர் முருகனும் நாயகியும் நீண்ட காலமாகவே ஒரு வீட்டில்த் தங்கி அன்யோன்யமாய் வாழ்க்கை நடத்துகிறார்கள். அடுத்த வீட்டிலுள்ள ஏழைப் பெண்ணொருத்தி, வீட்டுக்குவந்து நாயகியிடம் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். அதுமாத்திரமல்ல ஏதோ அடுத்த ஊர் கலியாணத்துக்கோ வேறு விசேஷத்துக்கோ போகிறதாய் இருந்தால் நகையோ, துணியோ நாயகியிடம் இரவல் கேட்டு, அவைகளை அணிந்து கொண்டு போவதுண்டு. இப்படி யெல்லாம் இருக்கும்போது அந்த அடுத்த வீட்டுப் பெண்ணுக்கும் முருகனுக்கும் தொடர்பு ஏற்பட்டுவிட்டது.நாயகிக்குத் தெரியாமலே அந்தப் பெண்ணுக்கு வீடு கட்டிக்கொடுத்தார். சகலவித சௌகரியங்களும் செல்வமுமே செய்து கொடுத்தார். இதனால், அந்த ஏழைப் பெண்ணுக்கு இல்லாத ராங்கித்தனம் வந்துவிட்டது. நாயகியை கேவலமாகவும் பேச ஆரம்பித்துவிட்டாள். இதை யெல்லாம் கேட்ட தோழி நாயகியிடம் வந்து எப்படி யெல்லாமோ பேசுகிறாளே அந்த ராங்கி என்று சொல்லுகிறாள். அதற்குப் பதிலாக பூர்வ விருத்தாந்தத்தை ஞாபகப்படுத்திப் பேசுகிறாள் நாயகி.

ராகம்: சௌராஷ்டிரம் — தாளம்: ஆதி

பல்லவி

அதுவும் சொல்லுவாளவள் அனேகம் சொல்லுவாள்
அவள்மீதிற் குற்றமென்னடி அடியே போடி

அனுபல்லவி

மதிதவழும் சோலைசூழ் முத்துக்குமாரன் வேளூர்ப்
பதியான் முருகேசன் செய்த காரியத்திற்கு -அது

சரணம்

என்னேரமும் இங்கேவந்து நகையென்றும் துணியென்றும்
இரவல்கேட்ட நாள்போச்சே — எனக்(கு)

எதிரியாக அவள் சன்னக்காரை யிட்ட
மெத்தைவீடு முண்டாச்சே
உன்னத உன்னதமாக கட்டிலாச்சு மெத்தையாச்சு
உயர்ந்த மகமல்திண்டு பட்டுப்புட வையுமாச்சு
தன்னைவிடப் பாக்கியசாலி கிடையாதென் றெண்ணமாச்சு
தனியா யிருந்தவட்கு தாதிமார்களும் உண்டாச்சு -அது

2

கையிலில்லாதவள் ரெண்டுபணத்தைக் கண்டவுடனே
கர்வம்மேலிட்டுப் போச்சே
கருகுமணிக்கு வழியில்லாமல் நின்றவள்
கழுத்தில் கண்டசரமுமாச்சே
இரண்டு கைக்கும் தங்கத்தினுல் கொலுசு வளையலாச்சு
இரத்தினங்கள் இழைத்த ஜடைபில்லை ஜடைநாகமாச்சு
கண்டஇடத்தில் நின்றவட்கு கட்டுக்காவல் உண்டாச்சு
கறந்துகுடிக்க ஒருகொட்டில் மாடுமுண்டாச்சு -அது

---

சன்னக் காரையிட்ட மெத்தை வீடு - அருமையான சுதை வேலை செய்த மாடி வீடு.

## 30. தெருவில் வாராஞே: கமாஸ்

நடராஜப் பெருமான்மீது ஒரு பெண்ணுக்கு அபாரமான காதல். என்ன செய்வாள்? அவரிடம் போகமுடியுமா? அவர் ராஜா அல்லவா? ஏதோ தெருவில் பவனிவந்தால் பார்த்து அனுபவிக்கலாம். தூது போகிறதற்கு யார் இருக்கிருர்; ஒருவருமில்லையே. இதுதான் பாவம்.

ராகம்: கமாஸ் தாளம்: திஸ்ர நடை ஆதி

பல்லவி

தெருவில் வாராஞே என்னைச் சற்றே
திரும்பிப் பாராஞே

அனுபல்லவி

உருவிலியொடு திரிபுரத்தையும்
உடனெரிசெய்த நடனராஜன் -தெரு

சரணம்

வாசல்முன் நில்லாஞே - எனக்கொரு
வாசகம் சொல்லாஞே
நேசமாய்ப் புல்லாஞே - கழை வைத்த
ராஜனை வெல்லாஞே
தேசிகனம்பல வாணன் - நடம்புரி
தேவாதிதேவன் சிதம்பரநாதன் -தெரு

2

போது போகுதில்லையே — எனக்கொரு
தூதுசொல்வார் இல்லையே
ஈதறிந்தேன் இல்லையே என்மேல் குற்றம்
ஏதொன்றும் இல்லையே
வேதனும்மாலும் மூவாயிரவரும் - திரள்
விண்ணவரும்தொழ ஆடியபாதன் -தெரு

3

மெய்யென்றி ருந்தேனே — அவருடைய
செய்கை யறிந்தேனே
மையலுங் கொண்டேனே — செவ்விய
மெய்யும் பசந்தேனே
வையகம் உய்யப் பதஞ்சலி போற்றிட
வாழும் கனக சபை நடராஜன் -தெரு

# கீர்த்தனை



# 31. சேவிக்க வேண்டுமையா : ஷண்முகப்ரியா

ராகம் : ஷண்முகப்ரியா தாளம் : ஆதி

பல்லவி

சேவிக்க வேண்டுமையா — சிதம்பரம்
சேவிக்க வேண்டுமையா

அநுபல்லவி

சேவிக்க வேண்டும் சிதம்பர மூர்த்தியாம்
தேவாதிதேவன் திருச்சந்நிதி கண்டு -சே

சரணம்

காரானை மாமுகத் தைந்து கரத்தானை,
கற்பக ராயனை, முக்குறுணியானை,
சீரார்புலியூர்ப் பதிவாசல் தனில்வாழும்
தேவர் சிறைமீட்டும் சேவற் கொடியானை -சே

2

சிட்டர் பரவுந் திருமூலத் (து) அரனை
சிற்றம்பல மென்னும் பேரம்பலத் தானை
அட்டதிக்கும் புகழ் அம்பல வாணனை
ஆண்டவனைத் தில்லைத் தாண்டவராயனை -சே

## 32. ஆடிக்கொண்டாரந்த: மோஹனம்

ராகம்: மோஹனம் தாளம்: கண்டநடை ஆதி

பல்லவி

ஆடிக்கொண்டாரந்த வேடிக்கை காணக் — கண்
 ஆயிரம் வேண்டாமோ

அனுபல்லவி

நாடித் துதிப்பவர் பங்கிலுறைபவர்
 நம்பர், திருச்செம்பொன் அம்பலவாணர் -ஆடி

சரணம்

பங்கய பாதச் சிலம்பசைந்தாட
 பாதச் சதங்கைகள் கிண்கிணென்றாட
பொங்கமுடனே உரித்துத் தரித்த
 புலித்தோல் அசைந்தாட
செங்கையி லேந்திய மான்மழுவாட
 செம்பொற் குழைகள் முயலகனுட
கங்கை இளம்பிறை செஞ்சடையாட
 கனகசபை தனிலே -ஆடி

---

பொங்கமுடனே - அழகாக.

# 33. அருமருந்தொரு : மோஹனம்

ராகம்: மோஹனம் தாளம்: ரூபகம்

பல்லவி

அருமருந்தொரு தனிமருந்திதை
அம்பலத்தே கண்டேனே

அனுபல்லவி

திருமருந்துடன் சேருமருந்து
தில்லையம்பலத் தாடுமருந்து
இருவினைகள் அறுக்கும் மருந்து
ஏழையடியார்க் (கு) இரங்கும் மருந்து -அரு

சரணம்

கொன்றை தும்பை அணிந்த மருந்து
கோதை மீதில்ப் படர்ந்த மருந்து
மன்றுளே நின்றுஆடும் மருந்து
மாணிக்கவாசகர் கண்ட மருந்து -அரு

2

இந்திரர் வானவர் காணு மருந்து
இருடிகள் தமக் (கு) எட்டா மருந்து
சந்திரர் சூரியர் தேடும் மருந்து
தானே முளைத்துத் தழைத்த மருந்து -அரு

## 34. ஏன் பள்ளிகொண்டீர்: மோஹனம்

ராகம்: மோஹனம் தாளம்: ஆதி

பல்லவி

ஏன் பள்ளிகொண்டீரையா ஸ்ரீ ரெங்கநாதரே — நீர்
ஏன் பள்ளிகொண்டீரையா

அனுபல்லவி

ஆம்பல் பூத்தசய பருவத மடுவிலே
அவதரித்த இரண்டாற்று நடுவிலே -ஏன்

சரணம்

கோசிகன்சொல் குறித்த தற்கோ — அரக்கி
குலையில் அம்புதெரித்த தற்கோ
ஈசன்வில்லை முறித்த தற்கோ — பரசு
ராமன் உரம்பறித்த தற்கோ
மாசிலாத மிதிலேசன் பெண்ணுடன்
வழிநடந்த இளைப்போ
தூசிலாத குகன் ஓடத்திலே கங்கைத்
துறைகடந்த இளைப்போ
மீசுரமாம் சித்திரகூடச் சிகரக்கல்
மிசை நடந்த இளைப்போ
காசினிமேல் மாரீசன் ஓடிய
கதி தொடர்ந்த இளைப்போ — ஓடிக்
களைத்தோ — தேவியைத் தேடி
இளைத்தோ — மரங்கள் ஏழும்
துளைத்தோ — கடலைக் கட்டி
வளைத்தோ — இலங்கை என்னும்
காவல் மாநகரை இடித்த வருத்தமோ
ராவணாதிகளை அடித்த வருத்தமோ -ஏன்

---

மீசுரம் - மேடான பாலைவனம்.

# 35. சுந்தர குஞ்சித : கரகரப்பிரியா

ராகம் : கரகரப்பிரியா　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

சுந்தர குஞ்சித பாதநிலை கண்டு
　　தொண்டு செய்வாய் மனமே

அனுபல்லவி

சந்ததம் தில்லைச் சிவகாமி பங்கனுர்
　　தானந்தமாகிய ஆனந்த நாடக　　　　-சுந்

சரணம்

அச்சுதன் முன்னுளில் ஏனமாகித் தேடும்
　　அரக்கன் தலைகள் நொறுங்கிடச் சூடும்
மெச்சி ஓர்பாம்பும் புலியுங்கொண் டாடும்
　　மேலாம் சிதம்பரம் தன்னில் நின்ருடும்　　-சுந்

2

நல்லவர் செம்மை மனத்தவர் போற்றும்
　　நம்பும் அடியார் பிறவியை மாற்றும்
தில்லை மூவாயிரர் பூசைசெய் தேத்தும்
　　திருமால் தன்கண்ணை மலரெனச் சாற்றும்　-சுந்

---

அச்சுதன் - விஷ்ணு. ஏனம் - பன்றி.

# 36. வருவாய் வரம்: கேதாரம்

ராகம்: கேதாரம் தாளம்: ரூபகம்

பல்லவி

வருவாய் வரந் தருவாய்
வாடினேன் உனை நாடினேன்

அநுபல்லவி

மருவார் பொழில் பழனிமாமலை
வாசனே முருகேசனே -வரு

சரணம்

விரைசேர் மலர்க்கரமார் - வடி
வேலா உமை பாலா
கரைவார் தம (து) உள மேவிய
காரணா சர்வ பூரணா -வரு

## 37. மாயவித்தை செய்கிறனே : கேதாரம்

ராகம் கேதாரம் தாளம் ஆதி

பல்லவி

மாயவித்தை செய்கிறனே - அம்பலவாணன்
மாயவித்தை செய்கிறனே

அனுபல்லவி

மாயவித்தை செய்கிறன்
காயமொன்று எடுத்துக்கொண்டு
நேயமான வெளிதன்னில்
உபாயமாய்க் கூட்டத்திருந்து -மாய

சரணம்

உண்டுபண்ணி வைக்கிறன்
கொண்டுகொண்டு போகிறன்
நன்றுக்கும் தீதுக்கும்
நடுவா யிருக்கிறன்
பண்டுநாலு வெளியெங்கும்
பாரெங்கும் காண ஒண்ணுன்
அண்டர்தொழ அம்பலத்தில்
ஒண்டிகட்டி யாடிக்கொண்டு -மாய

---

ஒண்டிகட்டி - சல்லடம் கட்டிக்கொண்டு.

# 38. என்னை ஆளையா : தர்பார்

ராகம் : தர்பார் தாளம் : மிஸ்ரசாப்பு

பல்லவி

என்னை ஆளையா - என் விண்ணப்பம்
தன்னைக் கேள் ஐயா

அனுபல்லவி

மின்னை நிகரும் வாழ்வை
வெறுப்பவர்க் குரியோனே
அன்னை பிதா சற்குரு
ஆகிய பெரியோனே -என்

சரணம்

அடியேன்மேற் சினமா - என்குறை நீக்கி
ஆள்வது கனமா
கடினம் நின்மனமா - எனது நெஞ்சம்
கவலைக் (கு) ஆசனமா
படியில்என் அகத்துறு
பாவஇருளை மாற்றி
திடமுறவே மெஞ்ஞான
தீபம்தனை ஏற்றி -என்

## 39. காணமல் இருந்தால்: கல்யாணி

ராகம்: கல்யாணி  தாளம்: ஜம்பை

பல்லவி

காணமல் இருந்தால் — என்
கலக்கம் தெளியாதே

அனுபல்லவி

பூணாரம் அரவணிந்த
பொன்னம்பல நாதனைக் -காண

சரணம்

திரிபுரத்தை யெரித்தானைச்
செங்கையில் மான்தரித்தானை
கரியுரித்துப் போர்த்தானைக்
கங்கை முடித்தானை
அரி அயனுந் துதித்தானை
அஞ்செழுத்தா யுதித்தானை
உருவிலியை எரித்தானை
ஒளி வெண்ணீற்றனைக் -காண

உருவிலி - மன்மதன்.

# 40. சபாபதிக்கு வேறே : ஆபோஹி

ராகம்: ஆபோஹி | தாளம்: ரூபகம்

பல்லவி

சபாபதிக்கு வேறே தெய்வம்
சமான மாகுமோ — தில்லை

அனுபல்லவி

கிருபாநிதி இவரைப் போலே
கிடைக்குமோ இந்தத் தாரணி தன்னிலே -சபா

சரணம்

ஒருதரம் சிவ சிதம்பரமென்று
உரைத்தாலும் போதும் போதும்
பரகதிக்கு வேறு புண்யம்
பண்ண வேண்டுமோ
அரிய புலையன் மூவர்பதம்
அடைந்தானென்று புராணம்
அறிந்து சொல்லக் கேட்டோம்
கோபாலகிருஷ்ணன் பாடும் தில்லைச் -சபா

# 41. அம்பர சிதம்பர: சுருட்டி

ராகம்: சுருட்டி                                        தாளம்: கண்டநடை ஆதி

பல்லவி

அம்பர சிதம்பர பரம்பர சதானந்த
அடிகள் மறவாதருள்வீர் அனுதினமுமே

அனுபல்லவி

செம்பொன் மலை சிலை வளைத்த
திவ்யபர மானந்த
சம்போ சிவசங்கர
ஸ்ரீதாண்ட, நடேசா -அம்

சரணம்

கங்கைமதி அரவசையக்
காதிற்குழை அசைய
செங்கைமழு துடியசையச்
செஞ்சடை அசைய
பொங்குபுலி அசையப்
பொற்பாதச் சிலம்பசைய
மங்கை சிவகாமவல்லி
மகிழ நடம் புரியும் -அம்

# 42. இன்னும் பராமுகம்: பியாகடை

ராகம்: பியாகடை தாளம்: ரூபகம்

பல்லவி

இன்னும் பராமுகம் ஏனோ
இது உமக்கு நீதிதானோ

அனுபல்லவி

வன்னத் தோகை மயில்மேல் வளர்
வையாபுரி வேல் முருகையா -இன்

சரணம்

மான் ஈன்ற வள்ளி
மகிழும் மணவாளா
மாதவர் சேவித பங்கஜ
மலர்த்தாளா
தேனூர்கடம் பணிதோளா
தீரா, வீரா சூரசம்ஹாரா -இன்

## 43. சிதம்பரம் அரஹரா : பியாகடை

ராகம்: பியாகடை  தாளம்: ஆதி

பல்லவி

சிதம்பரம் அரஹரா என்றொரு தரம் சொன்னால்
சிவபதம் கிடைக்கும் — தில்லைச்

அனுபல்லவி

பதம்பெற வேண்டுமென்றோர்க்கு இதுவன்றி
இல்லை மற்றது தொல்லை தில்லைச் -சித

சரணம்

நல்லுணர்வாகிய வேதியர் ஓதிய
நான்மறைகளும் நவின்றிடும் மந்திரம்
தில்லை மூவாயிரம் பேர்களும் பூஜைகள்
செய்தபின் யாவரும் துதித்திடும் மந்திரம் -சித

## 44. சாமி ஏழை நானையா: கானடா

ராகம்: கானடா    தாளம்: ரூபகம்

பல்லவி

சாமி ஏழை நானையா — உன்
சரணம் நம்பினேன் ஐயா

அனுபல்லவி

வாமி சிவகாமி தந்த
வையாபுரி வாழும் கந்த -சாமி

சரணம்

சொல்லச் சொல்ல வர்மமோ — இன்னும்
சோதிப் பதுவும் தர்மமோ
நல்வழி காட்டு வீண்நாள் கழித்து
நாயேன் அலையாமற் பழநிமுத்து -சாமி

# 45. பல மந்திரத்திற்கும்: மத்யமாவதி

ராகம் மத்யமாவதி தாளம் ஆதி

பல்லவி

பல மந்திரத்திற்கும் பலமந்திரம் — பொன்
அம்பலமென்னும் மந்திரமே

அனுபல்லவி

புலவர்க்கும் முனிவர்க்கும்
பலவர்க்கும் தியானிக்க
பொதுவா யிருக்கு மந்திரம்
அதுவே சிலாக்கிய மந்திரம் -பல

சரணம்

ஜனன மரண வாதை நீக்கிய மந்திரம்
சேரும் மும்மல மாயை போக்கிய மந்திரம்
மனதில் மெஞ்ஞானம் உண்டாக்கிய மந்திரம்
மந்திரத்திற் கெல்லாம் சிலாக்கிய மந்திரம் -பல

## 46. ஆடின தெப்படி : மாயாமாளவ கௌளை

ராகம்: மாயாமாளவ கௌளை தாளம் : ஆதி

பல்லவி

ஆடின தெப்படியோ — நடனம் நீர்
ஆடின தெப்படியோ

அநுபல்லவி

தேடிய மெய்ப்பொருளே வளமேவும்
சிதம்பரத்தே, ஒரு சேவடி தூக்கி நின்று -ஆடி

சரணம்

ஒன்றல்ல இரண்டல்ல
ஒன்றிரண்டு மல்ல
நன்றல்ல தீதல்ல
நாத விந்துமல்ல
அன்றல்ல இன்றல்ல
ஆதி யந்தமல்ல
மன்றுள் மரகத
வல்லி கொண்டாட -ஆடி

# 47. சிவசிதம்பரமென்று: பைரவி

ராகம்: பைரவி தாளம்: ஆதி

பல்லவி

சிவ சிதம்பரமென்று நினைப்பாயே — உனக்கு
அபஜயம் வாராது என்று மனப் பேயே

அனுபல்லவி

கவசம் உனக்கிது என்று அறிவாயே — நல்ல
கனகசபையில் — புலி பகை
முனிவர்கள் — தொழ
அனவரதமும் — திரு
நடனம் ஐயன் ஆடிடும் -சிவ

சரணம்

கன்மவினை போய்க் களைஆறலாமே — பொல்லா
மன்மத வாதை தீர்ந்து தேறலாமே
ஜன்ம சாகரக் கரை ஏறலாமே — எழுந்து
சென்றபோதிலும் — சும்மா
நின்ற போதிலும் — ஒன்றைத்
தின்ற போதிலும் — படிக்
கின்ற போதிலும் — நீ -சிவ

## 48. நினைப்பதெப்போது: நாதநாமக்கிரியை

ராகம்: நாதநாமக்கிரியை                                   தாளம்: ஆதி

பல்லவி

நினைப்ப தெப்போது நெஞ்சே — ஐயன் பதத்தை
நினைப்ப தெப்போது நெஞ்சே

அனுபல்லவி

தனத்தையும் மாதர் — யௌ
வனத்தையும் உத்தியோக
கனத்தையும் எண்ணிப் — பல
தினத்தையும் கழித்தால் - நினை

சரணம்

பாட்டிலும் பல — விளை
யாட்டிலும் துர்விஷயக்
காட்டிலும் புத்தி — தனை
நாட்டிநாள் கழித்தால் - நினை

## 49. காணுமல் வீணிலே: காம்போதி

ராகம்: காம்போதி                                        தாளம்: ஜம்பை

பல்லவி

காணுமல் வீணிலே காலங்கழித் தோமே

அனுபல்லவி

சேணுடர் போற்றுந் தில்லைச்
சிதம்பரத் தலத்தை -காணு

சரணம்

சேரன் சோழன் பாண்டியன்
இரண்யவன்மன் கோபுரமும்
சூர வீரப்பபூபன் செய்ததிரு மதில்களும்
பாருலகம் போற்று கின்ற
பஞ்சாக்ஷரப் படிகளும்
ஆரங்கள் சூழ்ந்த திரு
ஆயிரக்கால் மண்டபமும் -காணு

## 50. அருட் ஜோதி : பந்துவராளி

ராகம் : பந்துவராளி தாளம் : ரூபகம்

பல்லவி

அருட்ஜோதி தெய்வம் எனை
ஆண்டு கொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற
ஆனந்தத் தெய்வம்

அனுபல்லவி

பொருட்சாரும் மறை களெல்லாம்
போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம் உயர்
நாதாந்தத் தெய்வம் -அரு

சரணம்

இருட்பாடு நீக்கி ஒளி
யீந்தருளும் தெய்வம்
எண்ணிய நான் எண்ணியவா (று)
எனக்(கு) அருளும் தெய்வம்

தெருட்பாடல் உவந்தெனையும்
சிவமாக்கும் தெய்வம்
சித்ஸபையில் விளங்குகின்ற
தெய்வமதே தெய்வம் -அரு

# அபிநயப் பாட்டு



## 51. என்னதான் சொன்னாடி : அசாவேரி

ஒரு நாயகி நாயகனிடம் தூதுவிட்டாள். தூது போனவளும் திரும்பிவிட்டாள். வந்தவள் பேச வாயெடுக்கு முன்னமேயே, ஒரே ஆத்திரத்தில் என்னதான் சொன்னாடி என்று கேட்கிற பாவம்.

ராகம் : அசாவேரி தாளம் : மிஸ்ரசாப்பு

பல்லவி

என்னதான் சொன்னாடி - அன்னமே அவர்
எப்போது வருவாரடி

அனுபல்லவி

பன்னு தமிழ்க்(கு) உதவு
கர்னன் புதுவை வளர்
பங்கயத் திருமார்பன்
வெங்கடேசுவர சுவாமி -என்

சரணம்

மன்மதன் பகைதீருமா இங்கே—அவர்
வந்திட வேளையும் நேருமா
ரம்யமாய்ப் பகர்ந்தாயோ
நல்வார்த்தை கொணர்ந்தாயோ
சும்மா வந்து நின்றாயோ
சொல்லு பழமோ காயோ -என்

## 52. காசிருந்தால் இங்கே வாரும்: மத்யமாவதி

கடவுள் தத்துவத்தோடு திளைத்துள்ள ஞானிகள் கடவுளோடு எப்படி எல்லாமோ விளையாடுவார்கள். கடவுளைக் கேலி பண்ணுவார்கள். 'நான் சமர்த்தன் நீ சமர்த்தனல்ல' என்றெல்லாம் விளையாடுவார்கள். கடவுளே ஆன்மாவைத் தேடுகிறார் என்பது நம்மவர் சொல்லும் உண்மைகளில் ஒன்று. அப்படித் தேடுகிற ஒரு காரணத்தினால் ஆன்மாவிற்கு பிகு பண்ணிக்கொள்ள இடமிருக்கிறது. இந்த மனப்பாங்கை வைத்துக்கொண்டு 'காசிருந்தால் இங்கே வாரும்' என்று சல்லாபமாக வார்த்தையாடும் பெண்ணின் பாவத்தில் பார்க்கவேணும்.

ராகம்: மத்யமாவதி        தாளம்: மிஸ்ரசாப்பு

பல்லவி

காசிருந்தால் இங்கே வாரும் - சும்மா
கடன் என்றால் வந்தவழி பாரும்

அனுபல்லவி

வாசக்கடம்பணி தென்குன்றை வேலரே
மந்திரத்தினிலே மாங்காய்தான் விழுமோ -கா

சரணம்

அப்பா என்றதினால் உச்சிகுளிராது காணும் - நன்றாய்
அழுந்தத் தலையில் எண்ணெய்வைத்துத் தேய்த்திடல் வேணும்
இப்படி யிருந்தால் எங்கட்கு கட்டுமோ
ஏட்டினில் சர்க்க ரைருசி தட்டுமோ
செப்படி வித்தையினால் உறவொட்டுமோ
தேவடியாட் (கு) ஈதெல்லாம் சரிக்கட்டுமோ -கா

---

வாசக்கடம்பணி தென்குன்றை வேலரே - வாசத்தோடு கூடிய கடம்ப மாலையை அணிந்த குன்றக்குடியில் எழுந்தருளியிருக்கும் வேலவரே.

## 53. நேற்று ராத்திரி: காம்போதி

திருக்கழுக்குன்றத்திலுள்ள சுவாமி நாயகி வீட்டுக்கு வருகிறார். அவளுக்கு அவர்மீது கோபம். அதன் காரணமாகக் கடிந்து சொல்லுகிறாள். நேற்று ராத்திரி ஒரு பெண் வீட்டுக்குப் போனதில் அந்த வீட்டுக்குப் போனதாக எண்ணி இங்கே வருகிறீர். அந்த வீடும், அந்தப் பெண்ணும் நானல்ல என்று ஆங்காரத்தோடு பேசுகிறாள்.

ராகம்: காம்போதி தாளம்: ஆதி

பல்லவி

நேற்று ராத்திரிப் போன பெண்வீடு இதுவல்ல
நிலவரமாக உற்றுப் பாரும்

அனுபல்லவி

பூத்திருக்கும் சோலைசூழ் கழுக்குன்றம் தனில் மேவும்
புண்ணியரே அந்தக் கன்னியும் நானல்ல -நேற்

சரணம்

இருட்டு வேளையிலே நீர்
திருட்டுத்தனமாய்ச் செல்லும்
திருட்டெல்லாம் வெளியாச்சு
மிரட்டாதேயும் போம் ஸ்வாமி
திரட்டுப்பாலும் சீனியும்
தேனும் பாகும் கற்கண்டும்
பிரட்டி வாயி லூட்டிய
பெண் வீடந்த வீதியில் -நேற்

# 54. உன்னைத் தூதனுப்பினேன்: சாவேரி

சிவகிரி ஸ்தலத்தில் எழுந்தருளியுள்ள முருகனிடத்தில் ஒரு காதலி தன் சகியைத் தூதனுப்பியது மோசமாய்ப்போய் விட்டது. சகியினிடத்திலேயே சந்தேகங்கொள்ளும்படி நேர்ந்துவிட்டதாக பாவம்.

ராகம்: சாவேரி தாளம்: ஆதி

பல்லவி

உன்னைத் தூதனுப்பினேன் என்னடி நடந்தது
உள்ளது உரைப்பாய் சகியே

அனுபல்லவி

கன்னல் பெருகிவிளை
செந்நெல் குன்றுகள் சூழும்
கனவளமுரு சிவகிரிவளர் குகனிடம்
எனதுள நலிதலை உரைசெய மடமயில் -உன்

சரணம்

வாரிமுடித்த கூந்தல் வரிசை உலைந்ததென்ன
வன்னக்கபோலக் குங்குமம் கலைந்ததென்ன
சீர்பெருகும் கஸ்தூரித் திலகம் அழிந்ததென்ன
ஜிவுஜிவு என்றிரு கண்ணும் சிறிச்சிவந்ததென்ன

செய்யபவள நிகர்த்த
தையல்நின் உதடுசுத்த
துய்ய வெண்மையாய் வெளுத்த
செய்கை என்னடி மெத்த

சுகமுற விதவித
தொழில்முறை புரிபவன்
குகனிடம் மருவி நீ
வருவதாய்த் தெரியுதே -உன்

## 55. இதைவிட இன்னும் வேறே: சாவேரி

எங்கேயோ ஒரு அயலான பெண்ணிடம் போய்விட்டு வந்த வேளூர் முருகனைப் பார்த்து நாயகி கடிந்து சொல்கிறுற பாவம்.

ராகம்: சாவேரி தாளம்: ஆதி

பல்லவி

இதைவிட இன்னும் வேறே வேண்டுமோ சாக்ஷி - ஒன்றும்
இல்லை இல்லை என்று கோடி ப்ரவசனம்
எடுத்துரைக்கின்றீர்
அடுக்குமோ போம் போம்

அனுபல்லவி

மதிதவழ் வேளூர் முத்தையனே - அந்த
வஞ்சியுடன் கூடிக்
கொஞ்சி அணைந்திட்ட
மைக்குறியும் மஞ்சள்
வாடையும் சொல்லுதே -இ

சரணம்

எத்தனை சொன்னுலும் என்செவிக் கேருது
என்னத்திற்கு வீண் பேச்சு - அவள்
இன்னேரம் எங்கெங்கே தேடுவாளோ - பாவம்
எழுந்திரும் நேர மாச்சு -இ

## 56. தத்தை மொழியாள் : கல்யாணி

வேலூர் முத்துக்குமார சுவாமியிடம் ஒரு பெண் அபார மாகக் காதல் கொண்டுவிட்டாள். ஒரே ஆத்திரமாய் இருக் கிறாள். தனக்கு வேண்டியவளான தோழியைத் தூதனுப் பினாள். தூதுபோனவள் நாயகியின் கஷ்டத்தை எடுத்துச் சொல்லுகிறாள்.

ராகம்: கல்யாணி            தாளம்: திஸ்ர நடை ஆதி

பல்லவி

தத்தைமொழியாள் ஒரு பெண்
மெத்தவும் உமைத் தேடுராள்
மெத்தைமேலுந் தனைக்கட்டி
முத்தமிட்டணைந்து சேர —தத்

அனுபல்லவி

எத்திசையும் கீர்த்திபெற்ற
முத்துக்குமார துரையே
பித்துப் பிடித்தாற் போலவள்
நித்திரை வராமலொரு —தத்

சரணம்

சித்தினி ஜாதிக்குள் அவள் ரத்தினப் பெண் ஐயா ஸ்வாமி
சித்த மறிந்தே நடப்பாள் நித்தம் உம் மனப்படியே
ஒத்த விதமாய்ப் பேசுவாள் சத்தியந் தவறாதவள்
சித்தஜ நூல்ப் படித்தவள் வித்தைக்காரி ஸ்வாமி அவள் —தத்

---

தத்தை மொழியாள் - கிளிபோல் கொஞ்சிப் பேசுகிறவள்.

## 57. இன்னும் என்மேல் வர்மமோ: முகாரி

முருகன் நாயகினிடத்தினிருந்த பிரியத்தை மறந்தவராய் வேருெரு பெண்ணிடம் தன் பிரியத்தை எல்லாம் காட்டிக் கொண்டிருக்கிருர். இதை எல்லாம் சகித்துக் கொண்டு தானிருக்கிருள் நாயகி, எதற்காக எப்படியும் மனம் திரும்பும், பழய பிரியத்தை எல்லாம் காட்டுவார் என்ற எண்ணங் கொண்டுதான். முருகனிடம் முறையிடுகிற பாவம்.

ராகம்: முகாரி தாளம்: ரூபகம்

பல்லவி

இன்னும் என்மேல் வர்மமோ
இதுவும் நல்ல தர்மமோ

அனுபல்லவி

பன்னக பூஷணன் அருளிய
பாலா வடி வேலா சாமி -இன்

சரணம்

கன்னி வயதில் அன்னையறியக்
கைபிடித்து என்னைக் கலந்து மணந்து
உன்னைப் பிரியேன் என்று தலைதொட்டு
உறுதி மொழிகள் பகர்ந்து
பின்னெருத்தியை என் படுக்கையில்
பிரியமுடன் வைத்து மகிழ்ந்து
சொர்ன வருஷம் பொழிந் தனுதினம்
சுகித் திருப்பதைச் சகித் திருக்கையில் -இன்

---

பன்னக பூஷணன் அருளிய பாலா - பாம்பை ஆபாணமாகத் தரித்த பரமசிவன் பெற்ற முருகனே. சொர்ண வருஷம் பொழிந்து - பணத்தை அளவில்லாதபடி கொடுத்து.

## 58. எல்லா அருமைகளும்: தோடி

நாயகர் எல்லாம் லௌகிகங்களும் தெரிந்தவர். தன்னை எவ்வளவோ அருமைகளும் செய்து பாராட்டியவர். அவரை யாராலும் தவருன படிக்கு திருப்ப முடியாது என்றுதான் எண்ணி இருந்தேன். யாரோ ஒருத்தி போதனை செய்துவிட்டாள். எல்லாம் என் பொல்லாத காலந்தான் என்பதாக மனம் வருந்தித் தோழியிடம் சொல்லுகிருள் நாயகி:

ராகம்: தோடி தாளம்: ஆதி

பல்லவி

எல்லா அருமைகளும் எல்லாப் பெருமைகளும்
எல்லாம் தெரிந்ததுரைக் (கு) எவள் போதனை செய்தாளோ

அனுபல்லவி

பல்லார்க்கும் சகல பாக்கியமும் தான் கொடுத்துப்
பாங்குடனே பணிவிடை செய்துவைக்கும் லோலனடி
நல்ல கிரீடம் தரித்த அமரசிம் ஹேந்திர
நாதனருளிய பிரதாப சிம்மராஜனுக்கு -எல்

சரணம்

கங்கணங் கட்டியநாள் முதலாயிது வரையில்
கடிந்ததொரு வார்த்தை சொல்லி அறியேனடி—அவர்
எங்கே யிருந்தாலும் அவரை நினைந் துருக
என் தலையில் ஈசன் எழுதினுரடி
என் கணவனுக்கிணை யுண்டோ ராஜாதி ராஜர்கள்
எதிரிலே வந்து நின்று கப்பமுங் கட்ட
பொங்குபுகழ் தானுடைய எங்கள்துரை இவரைப்போல்
பூதலத்தில் உண்டோஎன் பொல்லாத காலமடி -எல்

---

நாயகன் பெயர் - பிரதாப சிம்மராஜன், அமர சிம்ஹேந்திரன் மகன்.

## 59. நித்திரையில்: பந்துவராளி

நாயகனைவிட்டுப் பிரிந்திருக்கிருள் நாயகி. பிரிந்து பல நாள் ஆகிவிட்டது. இந்த நிலையில் ஒருநாள் உறங்கிக்கொண்டிருக்கும்போது கனவு கண்டாள். நாயகனது பூமாலை தெரிகிறது, சிறிதுநேரம் கழித்து ரத்னஆரம் தெரிகிறது, பிறகு அவர் முகமே கொஞ்சம் தெரிகிறது. இதெல்லாம் நல்ல சகுனமாகவே எண்ணுகிருள். ஆனாலும் இதனால் மனம் ஒருவித ஆத்திரத்தை அடைகிறது: ஏக்கம் மிகுதியாகி, தோழியிடம் சொல்லுகிருள் தலைவி.

ராகம்: பந்துவராளி தாளம்: ஆதி

பல்லவி

நித்திரையில் சொப்பனத்தில்
நேற்று ராத்திரி மேடை மீதினில்
நேர்த்தியா யுகந்திருந்தது அத்துயிலை
நினைந்து நினைந்து உருகுதடி

அனுபல்லவி

முத்தமிழும் கீர்த்திகொண்ட
முக்தன் அமரசிம்ஹேந்திர பூபன்
புத்திரன் பிரதாப ராமதுரை
போஜனென்று எண்ணடி மாங்குயிலே -நித்

சரணம்

மாலையோ ரத்னஆரமோ திகழும் மார்பமோ
மலர்ந்த முகமோ என்னமோ நானறியேனே
நாலுஜாமமும் நாலுயுக மாகுதடி
நான்என்ன செய்வேனடி அன்னமேநீ
சொல்வாயடி -நித்

## 60. யாருக்காகிலும் பயமா: பியாகடை

ஒரு பெண்ணுக்கு இல்லாத பாக்கியம் ஒன்று கிடைத்து விட்டது. அதாவது நாயகனது ஏகபோக அனுபவம்தான். ஒரே எக்களிப்பு உண்டாகிவிட்டது. ஊரார் என்ன வம்பெல்லாமோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அவளுக்குக் கவலையில்லை. ஏன், அப்படி வம்பு பேசுவதில் இல்லாத திருப்தி தான். இதில் பயம் வேறு இருக்கவா செய்கிறது. யாருக் காகிலும் பயமா என்று சொல்வது இயல்புதான்.

ராகம்: பியாகடை

தாளம்: ஆதி

பல்லவி

யாருக்காகிலும் பயமா சும்மா சொல்லட்டும்
அதிலென்ன ரகசிய மா

அனுபல்லவி

போருக்குள் விஜயன்இம் மோடிலிங்க துரை
போகங் கிடைத்ததென்றன்
யோகம் அல்லவோ பெண்ணே -யா

சரணம்

நான்பிடித்த (து) என்ன முருங்கைக்கொம்புப் பிடியா
நடத்தை தெரிந்தவருக்(கு) ஒருத்தர் சொன்னபடியா
மான்போல் விழியார்க்கெல்லாம் இதுதான்ஒரு நொடியா
வஞ்சியே இதற்குநான் அஞ்சின குடியா -யா

# மங்களம்

புங்கவர் புகழுமா தங்கமு கந்திகழ்
எங்கள் கணேசராந் துங்கற்கு — மங்களம்

போதந் திகழ்பர நாதந் தனில்நின்ற
நீதராஞ் சண்முக நாதற்கு — மங்களம்

பூசைசெய் வாருளம் ஆசைசெய் வார்தில்லை
ஈசர் எமதுநட ராஜற்கு — மங்களம்

பூமி புகழ்குரு சாமி தனைஈன்ற
வாமி எனுஞ்சிவ காமிக்கு — மங்களம்

புங்க மிகுஞ்செல்வந் துங்கமு றத்தரும்
செங்கம லத்திரு மங்கைக்கு — மங்களம்

பூணி லங்குந்தன வாணி பரம்பர
வாணி கலைஞர்கொள் வாணிக்கு — மங்களம்



# பிழை திருத்தம்.

| பக்கம். | பிழை. | திருத்தம். |
|---|---|---|
| | பதம். | |
| 3 | தேற்றுவதல்லால் | தேற்றுவரல்லால் |
| 4 | மையலின் நின்று | மையலி நின்று |
| 5 | புகழ்ந்திடக் | புகழ்ந்திடும் |
| | கவிக் குஞ்சரஞ் தமிழ்க்கு | கவி குஞ்சரந் தமிழ்க்கு |
| | சரவண பவரே | சரவணேத் பவரே |
| 6 | யென்றனை | யென்தனை |
| | மின்வெட்டிற்... ...... ......சத்தி | மின்வெட்டிற்... ...... ......சத்தி அல்லகாணும் இந்தப் பிளுக் கிற் காரியம் வெற்றி ஆகுமோ |
| | ஆகுமோ....................புத்தி | ..............புத்தி |
| 8 | தெரிகிலே | தெரியாமல் |
| | தாய் பேரெடுப்பாய்......தான் | தாய் பெயரெடுப்பாய்...தான் |
| | 2 | |
| | மீன்விழியாளே ......துடுக்கு | மீன்விழியாளே .... துடுக்கு |
| 9 | பதறிவருது | பதறிவருகுது |
| 12 | என் சிவமே மூவர்க்கும் | என் சிவமே நீ மூவர்க்கும் |
| 15 | அம்மம்ம | அம்மம்மா |
| 16 | செய்வேன் | செய்குவேன் |
| | நிண்யஎனும் | நிண்யனெனும் |
| | புண்யஎனும் | புண்யனெனும் |
| 19 | பசும் பொன்னிறம் | பசும் பொன்னிறமும் |
| | உருகிருள் | உருகுருள் |
| 20 | முகத்தைக்காட்டித் | முகத்தைக்காட்டியே |
| 24 | ஒங்குமுயர் | ஓங்குமுயர் |
| 25 | அனுதினம் | அனுதினமும் |
| | மத்தளம்கொட்ட | மத்தளம் தூக்க |
| | சென்னியில் | சென்னிமேல் |

| | | |
|---|---|---|
| | முயலயகன் | முயலகன் |
| 27 | ஓதிவணங்கும் நடேசரே—உம்மை | ஓதிவணங்கும் நடேசரே உம்மை—நான் |
| 30 | சிதரப் | சிதறப் |
| 34 | மூவாயிரவரும் | மூவாயிரருந் |
| | அவருடைய | அவருடை |
| | செவ்விய | செவ்விய என் |

கீர்த்தனை.

| | | |
|---|---|---|
| 37 | பதிவாசல் தனில்வாழும் | பதிதலைவாசல் வாழும் |
| | திருமூலத்(து) அரனை | திருமூலத்தானை |
| 38 | பங்கிலுறைபவர் | பங்கிலுறைந்திடும் |
| 39 | காணாமருந்து | நாடும் மருந்து |
| 40 | ஓடிய | ஓடிய |
| 41 | சூடும் | சாடும் |
| | அடியவர் | அடியார் |
| 45 | கங்கை முடித்தானை | கங்கை முடிதரித்தானை |
| 47 | பொங்கு புலி அசைய | பொங்கு புலியதளசையப் |
| 49 | ஒதிய | ஓதிய |
| 53 | என்று | என்றும் |
| | தேறலாமே | தேறலாமே — கொடும் |

அபிநயப் பாட்டு.

| | | |
|---|---|---|
| 60 | என்றதினால் | என்றதனால் |
| | தேய்த்திடல் வேணும் | தேய்த்திடவல்லோ வேணும் |
| 64 | தேடுராள் | தேடுறாள் |
| | வராமலொரு | வராமல் இளம் |
| 67 | ராமதுரை | ராஜதுரை |